DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகின் உலகில் எத்திக்கும் தமிழ் ஒலிக்கும் எங்கள் செய்தி இதழ்
$1.00
416-752-1524
416-752-6703

உதயம் 1293 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 15, 2021

# டொனால்ட் டிரம்ப் விரும்பினாலும் மீண்டும் அரச பதவிகளை வகிக்க முடியாது என்பது முடிவாகியுள்ளது!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீதான பதவி நீக்கத் தீர்மானம் அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் அமெரிக்க வரலாற்றில் இந்தத் தீர்மானத்திற்கு இரண்டாவது முறை முகம்கொடுக்கும் முதல் ஜனாதிபதியாக டிரம்ப் பதிவாகியுள்ளார்.

அமெரிக்க பாராளுமன்றம் அமைந்திருக்கும் கெப்பிட்டல் கட்டடத்தில் கடந்த வாரம் டிரம்ப் ஆதரவாளர்கள் அத்துமீறி நுழைந்து கலகத்தில் ஈடுபட்டது தொடர்பில் டிரம்ப் மீது கலகத்தை தூண்டியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

மேலும் தற்போது எழுந்துள்ள அரசியல் கொந்தளிப்பு நிறைந்த வேளையில் இந்த பதவி நீக்கத் தீர்மானத்திற்கு செனட்டில் போதுமான ஆதரவு கிடைத்தால் டிரம்பினால் மீண்டும் அரச துறை பதவிகளை வகிக்க முடியாமல் போகும் என்பது நிதர்சனமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. *(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கம்)*

# ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் நன்கொடையில் யாழ் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்பெற்றன






இலங்கையின் வடக்கு கிழக்கில், சுற்றுச்சூழல் பாதுகாப்பை முதன்மைப் பணியாகக் கருதிச் செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் தைமாதம் பாடசாலை ஆரம்பமாகும்போது வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுகின்ற மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழ்ச் சமூகத்தின் கல்வி மேம்பாடு கருதித் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் முன்னெடுத்து வருகின்ற இத்திட்டத்துக்கு கனடாவின் ரொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பு இந்த ஆண்டு ஆறு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கம்)*

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404


THE GUARDIAN
HOME REALTY INC.
BROKERAGE, Independently Owned and Operated
Where life begins...
புதுமலரின் வாசமுடன்
புன்னகைக்கும் நேசமுடன்
புத்துணர்வு பொங்க
வாழ்த்தி
வரவேற்போம்
தைமகளை
Contact us
F119 - 80 Nashdene Road,
Scarborough ON M1V 5E4
Phone: (416) 989 - 6565 web: www.theguardianhomes.com

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## ஸ்காபுரோவில் வேலை வாய்ப்பு

**WAREHOUSE ORDER PICKER/PACKER / GENERAL HELP (PART TIME/FULL TIME)**
(For a Food distribution company)

**Job Description:**

- Order picking and packing as well as stocking up of shelves.
- Contribute to daily inbound or outbound warehouse operations.
- Palletize and wrap skids, organize warehouse space, Pick and load orders quickly and accurately and other duties as required.
- Arranging Cartons and Bags in racks and also inside the Freezer

**Requirements:**

- 1 position, Preferred Experience - 2-3 yrs. in food wholesale/distribution warehouse. Students/New Immigrants Welcome.
- Capable of lifting up to 50lbs
- Able to speak English
- Full time Shift- 11am to 7pm on weekdays. Part time also available.
- Hourly Rate - Order Picker - $17 to $19 , Packer/Helper-$16 to $18 depending upon experience.

Please send your resumes by email at siva@srimi.com or by fax at +1 647-351-7157 or
Call Ram at +1 647-831-9149 (Morning) or Siva at +1 416-666-8525 (Evening).

உதயன் கதிரோட்டம்

# முடி வரையும் இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் தூபியின் அடியின் வெறுமை

கடந்த வாரம் மிலேச்சத்தனமாக அரங்கேற்றப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் அமைந்திருந்த 'முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி' அழிப்பு நடவடிக்கையில் யாருக்கும் வெற்றி என்பது அறியப்படாத ஒன்றாகவே உள்ளது. காரணம் ஒரு பக்கத்தில் அப்பாவி மாணவர்கள். ஆதரவு மிகவும் குறைந்தவர்கள். மறுபக்கத்தில் உள்ள துணைவேந்தர் கூட அந்த மாணவர்களை ஒத்தவரே. அவருக்கும் ஆதரவ அல்லது பலம் மிகக் குறைவு. தற்போது அவருக்கு பலமாகத் தெரிகின்ற அவரது பதவி கூட அரச உயர் பீடத்தின் உத்தரவால் பறிக்கப்பட்டால், அவரது பாதிக்கப்பட்ட மாணவர்களைப் போலவே ஒரு பலமற்றவர் ஆகிவிடுவார். முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டு பின்னர் மாணவர்கள் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கி, அதனைத் தொடர்ந்து இடிக்கப்பட்டு சிதறிக் கிடந்த கற்களை சேர்த்து ஒரே இடத்தில் குவித்து, அவற்றில் சிலவற்றை எடுத்து மீளவும் அடிக்கல் நாட்டப்பட்டது போன்ற நிகழ்வு கூடு சிலரது பார்வைக்கு இடிக்கப்பட்ட தூபிக்கு அஞ்சலி செலுத்துவது போன்ற காட்சியாகவே தெரிந்திருக்கும். இதைத் தான் நாம் வெளியிட்ட முள்ளிவாய்க்கால் தூபி இடிப்பு தொடர்பான விசேட பதிப்பின் ஆசிரிய தலையங்கத்தின் தலைப்பாகப் பதித்திருந்தோம். 'முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு அஞ்சலியா?' என்பதே அந்த தலைப்பு.

ஆமாம்!, அந்த கல்விச் சாலையின் மையத்தில் ஒய்யாரமாக எழுந்து நின்ற அழிவின் அடையாளம் ஒன்று அடியோடு தகர்க்கப்பட்டது. தற்போது அதன் அடியும் முடியும் தெரியாத ஒரு இடமாக வெறுமையாய் விரிந்து கிடக்கிறது இந்த நினைவின் இருப்பிடம். நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று தூபியை இடித்தவர்கள் விசமத்துடன் சிரித்த வண்ணம் இருக்க துணைவேந்தரும் மாணவர்களும் பலமற்றவர்களாக பக்கமாய் நிற்கின்றார்கள். அவர்களுக்கு ஆதரவுக் கரம் காட்டுடவது போல் வந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலங்களிலில் மட்டுமல்ல எப்போதுமே பாராளுமன்ற அரசியலின் சுகபோகங்களை அனுபவித்து வருபவர்கள். அவர்களால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை.

தமிழர்களுக்கு எதிரான இனவாத யுத்தம் முடிவுக்கு வந்த 2009 மே மாதம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் எதிராக வன்னியில் முன்னெடுக்கப்பட்ட இரத்தக்களரி இராணுவத் தாக்குதலில் பலியானவர்களை நினைவுகூறும் வகையில், 2019 மே மாதம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் இந்த நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டது. இந்த தாக்குதலில் தனது தந்தையை பலிகொடுத்த ஒரு பல்கலைக்கழக மாணவரால் இந்த நினைவுத் தூபி கட்டப்பட்டது.

நினைவுத்தூபி இடிக்கப்படுவதை அறிந்த மாணவர்கள் மற்றும் பிரதேசவாசிகளும் பல்கலைக்கழக பிரதேசத்தில் குவிந்தனர். ஆனால் பல்கலைக்கழக அதிகாரிகளும் பாதுகாப்பு படையினரும் எவரையும் வளாகத்தினுள் செல்ல அனுமதிக்கவில்லை. பின்னர் மாணவர்கள் பல்கலைக்கழக வாயில் அருகே அமர்ந்து சத்தியாகிரகத்தை தொடங்கினர்.

பொலிசார் ஏற்கனவே இரண்டு மாணவர்களை கைது செய்துள்ளதுடன், நினைவுத்தூபியை இடிப்பதை எதிர்த்து பிரச்சாரம் செய்பவர்கள் மீதான கொடூரமான பொலிஸ் பாய்ச்சல், மாணவர்கள் மீது அரச ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுவதற்கான முன் எச்சரிக்கை ஆகும். இராணுவத்தை அனுப்பி மேற்கொள்ளப்பட்ட ஆத்திரமூட்டல், இராஜபக்சா அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் இடையே அதிகரித்து வரும் கோபத்திற்கும் எதிர்ப்பிற்கும் மத்தியில், மக்களை இனரீதியாக பிளவுபடுத்தும் நோக்கத்துடன், தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத பிளவுகளைத் தூண்டிவிடும் நடவடிக்கை ஆகும்.

யுத்தம் முடிவடைந்து 11 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் காணி, வீட்டுவசதி மற்றும் வாழ்வாதாரங்கள் உட்பட பல அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இராணுவம் ஆக்கிரமிப்பை தொடர்வதோடு அவர்களின் ஜனநாயக உரிமைகளை மேலும் நசுக்கி வருகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமைகள் குறித்து எந்த அக்கறையும் கிடையாது. இவ்வாறான நேரத்தில் அடியும் முடியும் தொடர்பில்லாமல் கிடத்திவிடப்பட்டுள்ள நினைவுத் தூபியைப் போலவும் எமது விடுதலைப் போராட்டத்தைப் போலவும் இந்த தூபியின் எழுந்து நின்ற இடத்தில் என்ன மாற்றம் நிகழப் போகின்றது என்பது பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

## அறை வாடகைக்கு உண்டு

ஸ்காபரோ நகரில் Birchmount and FInch சந்திப்புக்கு அருகில் உள்ள Apartment ஒன்றில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. சமையல் அறை பயன்படுத்தலாம் பஸ் வசதிகள், கடைகள், வைத்திய நிலையம், கோவில் அனைத்தும் அருகில் உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது.

**Call: 905- 903 6466**

# மன்னாரில் தொற்றுடன் காணப்பட்டவர்கள் நடை முறைகளை பின்பற்ற தவறியதால்தான் தொற்று அதிகரித்தது

மன்னார் மாவட்டத்தில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் சுகாதார நடை முறைகளை சரியான முறையில் பின்பற்ற தவறியதன் காரணத்தினாலேயே தொற்று ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று வெள்ளிக்கிழமை(15) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

மன்னார் மாவட்டத்தில் மேலும் 5 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இவர்களின் 3 நபர்கள் மன்னார் பஸார் பகுதியில் உள்ள பிரபலமான உணவகம் ஒன்றில் பணியாற்றுபவர்கள்.நான்காவது தொற்றாளர் பஸ் நிலைய பகுதி ஒன்றில் அமைந்துள்ள புடவை விற்பனை நிலையத்தின் உரிமையாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.இவருடைய விற்பனை நிலையத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

5 ஆவது நபர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் ஒரு உத்தியோகத்தர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கொரோனா தொற்றுள்ள நோயாளர் ஒருவரை கவனிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.இந்த நிலையிலே குறித்த உத்தியோகத்தருக்கு நோய் தொற்றி இருக்கலாம் என நம்புகின்றோம்.

-மன்னார் மாவட்டத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் தற்போது வரை 21 நபர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 17 நபர்கள் எழுந்தமானமாக சமூகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதும், எஞ்சிய 4 நபர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர்.பரிசோதனைகளின் போதும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

-மன்னார் நகரப்பகுதி மற்றும்,கடைத்தொகுதிகளில் எழுந்தமானமாக பீ.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த புதன் கிழமை மன்னார் மன்னார் நகர் பகுதியில் கடைகளில் வேலை செய்கின்றவர்கள், கடை உரிமையாளர்கள்,கடைகளுக்கு வந்தவர்கள் என 452 நபர்களுக்கு பீ.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மாதிரிகள் அபேட்சா மற்றும் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலைகளுக்கு பரிசோதனைக்காக அனுக்கி வைக்கப்பட்டுள்ளது. முடிவுகளை எதிர் பார்த்துள்ளோம். இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை இலங்கை அரச போக்குவரத்து மன்னார் சாலை டிப்போவில் பீ.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் கலந்து உரையாடியதன் பிரகாரம் அவர்களுக்கு தொற்றானது சாதாரண நிலைமையில் ஏற்படவில்லை.




அவர்கள் சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்ற தவறியதன் காரணத்தினால் தொற்று ஏற்பட்டுள்ளதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே பொது மக்கள் அடிப்படையான சுகாதார நடைமுறைகளை கடை பிடிப்பதன் ஊடாக தொற்றில் இருந்து இலகுவாக தப்பித்துக் கொள்ள முடியும்.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்ட இரண்டு தொற்றாளர்களும் மிகவும் அபாயமான நிலையிலேயே வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டார்கள்.

முதலாவது நபர் பேசாலை வைத்தியசாலையில் இருந்து சுவாசத்தினறல்,குருதி அமுக்க குறைபாட்டுடன் மாற்றப்பட்டார். மிகுந்த கஸ்டத்தின் மத்தியில் மன்னார் பொது வைத்தியசாலை உத்தியோகத்தர்களினால் தொடர்ந்தும் சிகிச்சை அழிக்கப்பட்டு சிகிச்சையில் முன்னேற்றம் அடைந்து வருகின்றார்.

இரண்டாவது நபர் கடுமையான வயிற்றோட்டம்,குருதி அமுக்க குறைவு காரணமாக எருக்கலம் பிட்டி வைத்தியசாலையில் முதலுதவி செய்யப்பட்டு,மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.தற்போது பிம்புர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எமது உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பான பணியின் காரணமாக இவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது.

எனவே தொடர்ச்சியாக அதிகளவான நோயளர்கள் இவ்வாறு அபாயமான நிலமையில் வரும் போது இவர்களின் உயிர்களை காப்பாற்றுவதற்காக எமது உத்தியோகத்தர்கள் கடமையாக பாடுபட வேண்டிய நிலை ஏற்படும்.

இதனால் உயிர் இழப்புக்களையும் மக்கள் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே மக்கள் அடிப்படையான சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக நீங்கள் சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்கின்ற போது கடைபிடிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளுகின்றேன்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# கனடா உதயன் வெள்ளி விழா ஆண்டு 2021

வெள்ளி விழா 25th ANNIVERSARY www.uthayannews.ca UTHAYAN உதயன்

POWERED BY VIBRANT HOSPITALITY GROUP — OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY. OUR EXPERTISE: CONSTRUCTION & DESIGN, OPERATIONS, REVENUE MANAGEMENT, SALES & MARKETING, HUMAN RESOURCES. Shankar Nallathamby, CHA, Director, shankar@vhgcanada.com, www.vibranthospitalitygroup.com, Toll free: 1 888 674 7770 | Local: 905 769 1509

### உலகளாவிய மாணவர்களுக்கான இணையவழி ஊடான

## பேச்சுப் போட்டி

## நான் விரும்பும் அரசியல் தலைவர்

இங்கு காணப்படும் தமிழ்த் தலைவர்களிலிருந்து தங்களுக்கு பிடித்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி **5 நிமிடங்களுக்கு** மேற்படாமல் பேச வேண்டும். போட்டி ZOOM செயலியூடாக **பெப்ரவரி 27. 28 தினங்களில்** நடைபெறும். கனடா, இந்தியா, அமெரிக்கா, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். இவர்களோடு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சேர்ந்து எடுக்கும் இறுதி முடிவிற்கு ஏற்பவே பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.




## நிபந்தனைகள்

1. உலகின் எப்பாகத்திலும் வாழும் 20 வயதிற்கு உட்பட்ட தமிழ் பேசும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் (வயதை உறுதிப்படுத்தும் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

2. இங்கு காணப்படும் தலைவர்களில் தாம் விரும்பும் ஒருவரைப் பற்றி மட்டும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் பேசவேண்டும்
3. போட்டிக்கான உரையை அவர்களாகவோ அன்றி மற்றவர்களின் உதவியுடனோ தயாரிக்கலாம்.

4. இறுதிப் போட்டிக்கு முன்பதாக தேவையேற்படின் முதற்சுற்றுப் போட்டியில் பங்குபற்றவும் தயாராக இருக்க வேண்டும்.

5. போட்டி இடம்பெறும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் போட்டியில் பங்கு பற்ற தயாராக இருக்க வேண்டும்.

6. பேச்சுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பின்வரும் விபரங்களை uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சலுக்கோ அன்றி 1 (416) 732 1608 / 1 (416) 587 0552 என்னும் இலக்கத்தில் WhatsApp இற்கோ அனுப்பி வைக்க வேண்டும்.
மாணவரின் முழுப் பெயர், மாணவரின் வயது, கல்வி கற்கும் பாடசாலை அல்லது பல்கலைக் கழகம், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் விலாசம்:-
(பெற்றோர் அல்லது பாதுகாவலர் விபரங்களும் இணைக்கப்படலாம்)

7. விபரங்கள் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் பெப்ரவரி 12, 2021 வெள்ளிக்கிழமையாகும். அந்த திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. பரிசு பெறும் மாணவர்களுக்கு பணத்தொகையும் சான்றிதழ்களும் நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு ஊடாகவோ அனுப்பி வைக்கப்படும்.

## நடுவர்கள்

பேராசிரியர் சங்கரநாராயணன் (தமிழ்நாடு)
வழக்கறிஞர் தி. இராமகிருஸ்ணன் (தமிழ்நாடு)
திரு ஆர். சர்வேஸ்வரா (இலங்கை)
திரு குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா)
திரு நிமால் விநாயகமூர்த்தி (கனடா)
திரு. வீணைமைந்தன் சண்முகராஜா (மொன்றியால்-கனடா)

## பரிசுகள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | ஐந்து ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|
| 300 கனடிய டொலர்கள் | 200 கனடிய டொலர்கள் | 100 கனடிய டொலர்கள் | 50 கனடிய டொலர்கள் |

### ZOOM பெப்ரவரி 27, 2021 சனிக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 812 3636 6126 | Passcode: 962261**

### ZOOM பெப்ரவரி 28, 2021 ஞாயிற்றுக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 827 6566 9766 | Passcode: 892482**

**சமர்ப்பிக்கவேண்டிய இறுதி திகதி: பெப்ரவரி 12, 2021**
மின்னஞ்சல்: uthayannews@yahoo.com
WhatsApp: +1 (416) 732 1608/+1 (416) 587 0552

102.7 east FM தமிழ் | உலகத்தமிழர் | ஈழநாடு | yugam radio | Roobam FM | ஈழமுரசு

SANTHA PLUMBING & DRAINAGE SERVICES — FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Electical,Plumbing and drainage service Residential Commercial and industrial All Repairs & Renovations
Santha Plumbing and drainage service
Tel : 416 200 5470
info@santha.ca
www.santha.ca

CAMSONICS SECURITY SYSTEMS.INC
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS
FULL HD
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD
Rajeev Sebarasha :- 647.302.5748

FRUITS HABY
மொன்றியல் மாநகரில் பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு புகழ்பெற்ற தமிழர் பலசரக்கு மாளிகை
5925 Victoria Ave, Montreal, QC

Dir: (647) 668-8276
Bus: (905) 201-9977
HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE
For all your Real Estate needs...
Buyers and Sellers - I will pay your Lawyer Fees and Moving Charges!**
VALLIKKANNAN MARUTHAPPAN Sales Representative

வீடு விற்க! வாங்க
Award winning Agents will give you Professional, Reliable and Friendly Services
We can arrange Mortgage, Second Mortgage and Refinance.
ROYALAN TEAM
" Our clients are our value"
Ragu Thillainathan 416-629-5800
Kailain Thillainathan 647-668-8276
kailain.thillai@gmail.com

# ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் நன்கொடையில் யாழ் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள்

இலங்கையின் வடக்கு கிழக்கில், சுற்றுச்சூழல் பாதுகாப்பை முதன்மைப் பணியாகக் கருதிச் செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் தைமாதம் பாடசாலை ஆரம்பமாகும்போது வறுமைக் கோட்டுக்குக்கீழே வாழுகின்ற மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வருகிறது.




போரினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தின் கல்வி மேம்பாடு கருதித் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் முன்னெடுத்து வருகின்ற இத்திட்டத்துக்கு கனடாவின் ரொறன்ரோவின் மனித நேயக் குரல் அமைப்பு இந்த ஆண்டு ஆறு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. மரநடுகை விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒளிப்படங்கள் மற்றும் மேற்கோள்கள் அட்டையில் அச்சிடப்பட்ட அப்பியாசப் புத்தகங்கள் பின்தங்கிய கிராமங்களில் உள்ள மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.



இதன் தொடக்க நிகழ்ச்சி அண்மையில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது. மேற்படி தொகையை கனடாவில் அன்பளித்தவர்கள் பின்வருமாறு:- பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அம்மையார்- 3 இலட்சம், நித்தியானந்தா தியான பயிற்சி நிலையம்: ஒன்றரை இலட்சம், வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி: 75 ஆயிரம், உதயன் பத்திரிகை நிறுவனம்: 75 ஆயிரம்.












# தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் கனடிய பிரதமர் அவர்கள்

ஜனவரி 14, 2021

ஒட்டாவா, ஒன்றாரியோ பிரதமரின் அலுவலகம்.



பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ, தைப்பொங்கலை முன்னிட்டுப் பின்வரும் அறிக்கையை இன்று வெளியிட்டார்:

“கனடாவிலும், உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தினர் இந்த வாரம் தைப்பொங்கலைக் கொண்டாடுகிறார்கள்”.

“வழக்கமாக இந்த நான்கு நாள் பண்டிகையின்போது குடும்பத்தினரும், நண்பர்களும் ஒன்றுசேர்ந்து அமோகமான விளைச்சலுக்கு நன்றி தெரிவிப்பதுடன், இனிப்பான பொங்கலையும் பகிர்ந்துகொள்வார்கள். கோவிட்-19 இன் பரவலைத் தடுப்பதற்காக நாம் பொதுச் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதால் இவ்வாண்டில் நிலைமை மாறுபட்டதாக இருக்குமென்றாலும், இந்தப் பண்டிகையின் முக்கிய விடயங்களான சமாதானம், சமூகம் ஆகியவற்றை முதன்மைப்படுத்துவதற்கு மக்கள் புதிய வழிகளைக் கண்டுபிடிப்பார்களென்பது எனக்குத் தெரியும்”.

“ஜனவரி மாதம் கனடாவில் தமிழ் மரபுரிமைத் திங்களாகவும் விளங்குகிறது. மேம்பட்டதும், அதிகம் நியாயமானதும், அனைவரையும் அதிக அளவில் உள்வாங்கியதுமான நாட்டை உருவாக்குவதில் தமிழ்க் கனேடியர்களின் பங்களிப்பை இந்த மாதத்தில் நாம் நினைவுகூருகிறோம். கனடாவிலும், உலகம் முழுவதிலும் உள்ள உயிர்த்துடிப்புள்ள தமிழ்ச் சமூகத்தின் வரலாறு, மீண்டுவரும் வல்லமை, பலம் என்பன குறித்து அறிந்து கொள்ளுமாறு அனைத்துக் கனேடியர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும், அதை மீண்டும் அமைக்குமாறு கோரியும் கனடா முழுவதும் உள்ள தமிழ்க் கனேடியர்கள் அண்மையில் ஒன்று திரண்டதை நாம் கண்டோம். மீளிணக்கத்திற்கு நினைவுகூருதல் முக்கியமானதென்பதை இது எம் அனைவருக்கும் நினைவுபடுத்துகிறது”.

“கனடாவிலும், உலகெங்கிலும், தைப்பொங்கலைக் கொண்டாடும் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக, துணைவியார் சோ.ஃபியும் நானும் அமைதிக்கும், உடல்நலத்துக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். --இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்.”

இலங்கை செய்திகள்

# ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கு: பிள்ளையான் விடுதலை — கொடுமை



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட 05 பிரதிவாதிகளும் விடுவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி டீ.எஸ் சூசைதாசன் நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் என்றழைக்கப்படுகின்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஐவருக்கு எதிரான வழக்கை சட்ட மா அதிபர் திணைக்களம் கடந்த 11ம் திகதி மீள பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த படுகொலை தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு சிப்பாய் எம். கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசங்க ஆகியோரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் சந்தேக நபர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஐவரும் கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி பிணை-யில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைதிகளின் விடுதலை தொடர்பில் மன்னாரில் அரசியல் சிவில் பிரதி நிதிகள் கலந்துரையாடல்

- மன்னார் நிருபர்



அரசியல் கைதிகளை பொங்களுக்கு முன்பாக விடுதலை செய்யக் கோரி வடக்கு கிழக்கு மாகாணங்களில் 14 நாட்கள் மும்மதங்களையும் சேர்ந்தவர்கள் மன்னார் சமூக பொருளாதரா மேம்பாட்டுக்கான நிறுவனம் மற்றும் ஏனைய பொது அமைப்புக்களும் இணைந்து பிரார்தனை வாரத்தை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாத நிலையில் அரசாங்கத்திற்கு அரசியல் கைதிக-ளின் விடுதலையை துரிதப்படுத்துவது தொடர்பாகவும் அரசியல் கைதிகளில் குடும்ப நிலையை தெளிவுபடுத்த வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் அரசியல் பிரதி நிதிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் குழுத்தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் நேற்று முன்தினம் மதியம் 3 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் சட்டத்தரணி எஸ்.டினேஸன் தமிழர் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தாய் நிலம் அறக்கட்டளை அமைப்பின் இணைப்பாளர் ஏ.சகாயம் சிவில் சமூக செயற்பாட்டாளர் பெணடிற், மன்னார் நகர சபை உறுப்பினர்கள், காணமல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் பிரதிநிதிகள் அரசி-யல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் அரசியல் கைதிகள் விடயத்தில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான குழு ஒன்றை அமைப்பதற்கான அவசியம் தொடர்பாகவும் குறித்த குழுவில் அரசியல் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்வாங்குவது தொடர்பாகவும் தமிழ் அரசியல் கைதிகள் உற்பட தமிழ் மக்களின் அரசியல் சமூக மட்ட பிரச்சினைகளின் உண்மை தன்மையை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கருத்தோவியக் கண்காட்சி



சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் நேற்று முன்தினம் 13ம் திகதி யாழ் பேரூந்து தரிப்பிடத்திற்கு முன்பாக கருத்தோவியக் கவனயீர்ப்பு ஒன்றினை நடாத்தியிருந்தனர்.

இது தொடர்பாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. மு.கோமகன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், இந்த தைப்பொங்கலுக்கேனும் அரசியல் கைதிகளான எமது உறவுகள் சிறை மீண்டு வருவார்கள் என நம்பியிருந்த குடும்ப உறவுகளின் கனவுகள் பொய்த்துப் போனதையிட்டு எம்மால் இவ் கருத்தோவியக் கண்காட்சி நடாத்த வேண்டியதொரு தேவை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் 64 வயதான கனகசபை தேவதாசன் என்ற வயோதிப தமிழ் அரசியல் கைதி ஏழு நாட்களாக தொடர் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருக்கின்றார். கொரோனா தொற்றுக்குள்ளாகிய இவர் தொடர்ந்து இன்னும் சில நாட்கள் உணவு தவிர்ப்பை நீடிப்பாரானால் கவலைக்குரிய விளைவுகள் ஏற்படலாம்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள்ஆட்சிப்பீடம் ஏறிய நாள்முதல் பல அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி வருகின்றார். கடந்தவாரம் கூட ஆயுதங்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த மாளிகாவத்தை போதி ராஜ ராம விகாரை விகாராதிபதி ஊவத்தேனை சுமணதேரர் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி ஜனாதிபதி அவரை விடுதலை செய்துள்ளார். ஆனாலும்கூட தமிழ் அரசியல் கைதியான இந்துமதகுரு ரகுபதி சர்மா அவர்கள் கடந்த ஆண்டுகளாக சிறையில் வாடுவதை ஜனாதிபதி மறந்துவிட்டாரா என்கிற விடயம் கவலையளிக்கிறது.

ஆகவே ஒரே நாடு ஒரே சட்டம் ஒரே நீதி என்று அடிக்கடி கூறும் அரசாங்கம் பன்நெடுங்காலமாக சிறையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதி மீதும் கருணை காட்டவேண்டும்- என அவர் மேலும் தெரிவித்தார்.

# வரலாற்று சிறப்புமிக்க திருக்கேதீஸ்வர ஆலயத்தில் தைத்திருநாளை முன்னிட்டு விசேட பூஜை.

- மன்னார் நிருபர் (14-01-2021)



தமிழர்களின் திரு-நாளாம் தைத்திருநாளை முன்னிட்டு நேற்று (வியாழக்கிழமை) காலை வரலாற்று சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பொங்கல் பொங்கப்பட்டு வி-சேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றது.

ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்கள் தலை-மையில் பொங்கல் பொங்கி விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவி-ல் பக்தர்கள் அனுமதிக்கப்பட நிலையில் சுக-ாதார வழிமுறை-றகளுடன் இம் முறை ஆலயத்தில் தைப்பொங்கல் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் மன்னாரில் உள்ள இந்து, கத்தோழிக்க ஆலயங்களிலும் பொங்கல் பொங்கி விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து மக்கள் அமைதியான முறையில் பொங்கல் திரு-நாளை கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# விடுதலையாகும் சசிகலாவுக்கு 50க்கும் மேற்பட்ட இடங்களில் வரவேற்பு அளிக்க ஏற்பாடு



சொத்து குவிப்பு வழக்கில் பெங்களூரு பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ள வி.கே.சசிகலா இம்மாதம் 27ஆம் தேதி விடுதலையாக இருக்கிறார். சொத்து குவிப்பு வழக்கில், சசிகலா, இளவரசி, சுதாகரனுக்கு, 4 ஆண்டுகள் சிறை தண்டனையை நீதிமன்றம் விதித்தது. இதையடுத்து, 3 பேரும், பெங்களூரு பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், சமூக ஆர்வலர் நரசிம்ம மூர்த்தி தகவல் உரிமை சட்டத்தின்கீழ் பெற்ற தகவல்படி, அவரை முன்கூட்டியே விடுதலை செய்ய வாய்ப்பில்லை என்றும், அபராதத் தொகை செலுத்திவிட்டால் ஜனவரி 27ஆம் தேதி விடுதலை ஆவார் என்றும் சிறைத்துறை நிர்வாகம் தெரிவித்தது.

இதனை அடுத்து, சசிகலா கடந்த மாதம் அபராத தொகை செலுத்தினார். எனவே, இம்மாதம் 27ஆம் தேதி சசிகலா விடுதலை ஆவது உறுதியாகியுள்ளது. விடுதலையாகி வெளியே வரும் சசிகலாவுக்கு, சிறை வளாகத்தில் வரவேற்பு அளிக்க அமமுக நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர்.

மேலும், கர்நாடக தமிழக எல்லையான, ஓசூர் ஜூஜூவாடி பகுதியில் பெரிய அளவில் வரவேற்பு அளிக்க, அமமுக நிர்வாகிகள் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இந்நிலையில், 27ஆம் தேதி இரவு ஓசூரில் தங்கி விட்டு, 28ஆம் தேதி சசிகலா சென்னை வருவார் என்றும், வழியில் அவருக்கு 50-க்கும் மேற்பட்ட இடங்களில் சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கோலாலம்பூர் பத்துமலை சுற்றுலா தலத்தில் இடம்பெற்ற "கொரோனா" பொங்கல்!



தைத் திங்கள் முதல் நாளில் பத்துமலை அருள்மிகு திருமுருக திருத்தலத்தில் பொங்கல் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு, தைப்பூசம் உள்ளிட்ட விழாக்களை உள்ளடக்கிய முப்பெரும் விழா அண்மைய ஆண்டுகளாக கோலாகலமாக கொண்டாடப்பட்டு வந்தது.

கோலாலம்பூர் அருள்மிகு மாரியம்மன் தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் இவ்விழா நாள் முழுவதும் கொண்டாடப்பட்டு வந்த வேளையில், பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி பெரும் பரபரப்புக்கிடையே நடைபெறும்.

ஆன்மிகத் தலைவர்கள், சுற்றுலா பிரமுகர்கள், அரசியல் புள்ளிகள், சமூக இயக்கத் தலைவர்கள், பன்மொழிப் பிரிவினர் கொண்ட தேசிய ஊடகத்தினர், பொதுமக்கள், பால்குடம்-கரும்பு காவடியுடன் தைப்பூச நேர்த்திக்கடன் செலுத்தும் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள், மலேசியாவில் பணிபுரியும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள், பத்துமலை தமிழ்ப்பள்ளி மாணவர்கள்-ஆசிரியர்கள் என இடம் கொள்ளாத அளவிற்கு மக்கள் கூட்டம் நிரம்பி வழியும்.

ஆனால், இந்தத் திருவள்ளுவர் ஆண்டு 2052 தை முதல் நாளில் ஆலயப் பணியாளர்களைத் தவிர வேறு ஒருவரும் காணப்படவில்லை. அர்ச்சனை செய்ய விரும்பி வந்த ஒரு சிலரும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணை தளர்த்தப்பட்டிருந்த அண்மைய மாதங்களில் மிதமான அளவில் பக்தர்கள் வந்துபோய்க் கொண்டிருந்த வேளையில், கோவிட்-19 நச்சுயிரியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அண்மை வாரத்தில் நான்கு இலக்க அளவில் நீடித்ததைத் தொடர்ந்து நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை மீண்டும் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் முதல் மலேசிய அரசு பிறப்பித்தததுடன் அவசரகால சட்டத்தையும் பிரகடப்படுத்தி உள்ளது.

இதனால், புறா மற்றும் குரங்குக் கூட்டங்களின் நடமாட்டம்தான் சுதந்திரமாக தென்பட்டனவேத் தவிர, பக்த அன்பர்களும் சுற்றுலப் பயணியரும் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது பத்துமலை வளாகம்.

இதற்கிடையில் ஆலய சிப்பந்தியரும் குருக்கள்களும் என ஏழெட்டு பேர் சேர்ந்து பொங்கல் வைத்தனர். தலைமைக் குருக்கள் சா.ரவி, க.ரு. ஜெயராம பண்டாரம், பெ.சுப்பையா பண்டாரம், க. செல்வம், சோ.சிவக்குமார் குருக்கள், சொ. முத்துக்குமார் குருக்கள் ஆகியோர் சூரிய ஒளியில் பொங்கல் வைத்து, பொங்கல் பானை பொங்கிய வேளையில் "பொங்கலோ பொங்கல்" என கூவி மகிழ்ந்தனர்.

தமிழ் நேசன் "யூ ட்யூப்" செய்தி ஒளிபரப்பின் சார்பில் சுந்தரும் வந்திருந்தார்.

## கனடாவின் ஒன்றாரியோ மாகணப் பாராளுமன்றத்தின் ஆளுங்கட்சி உறுப்பினரான திரு. லோகன் கணபதியின் கண்டனச் செய்தி



கனடாவின் ஒன்றாரியோ மாகணப் பாராளுமன்றத்தின் ஆளுங்கட்சி உறுப்பினரும் யாழ்ப்பாண பல்கலைகத்தில் பட்டம் பெற்றவருமான திரு. லோகன் கணபதி யாழ் பல்கலைக் கழகத்தில் அமைந்திருந்த "முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி" தகர்க்கப்பட்டது தொடர்பாக வெளியிட்ட கண்டனச் செய்தி.

# தந்தையின் கொலைக்கு நீதி கோரி ஐ நாவை அணுகியுள்ளார் லசந்தவின் மகள்



- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இலங்கையில் 12 ஆண்டுகளுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட மூத்த பத்திரிகையாளர் லசந்த விக்ரமதுங்க மகள் தனது தந்தையின் கொலைக்கு ஐ நா அமைப்பிடம் நீதி கோரி கோரியுள்ளார்.

"சண்டே லீடர்" பத்திரிகையின் ஆசிரியராக இருந்த லசந்த கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி காலை பணிக்குச் செல்லும் போது இராணுவத்துடன் தொடர்புடைய கூலிப் படைகள் என்று குற்றஞ்சாட்டப்படுபவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் உச்சக்கட்டத்திலிருந்த போது விமானப் படையினர் உக்ரைன் நாட்டிலிருந்து மிக் விமானங்களைக் கொள்வனவு செய்த விஷயத்தில் முறைகேடுகள் நடந்ததாகக் குற்றஞ்சாட்டி சில ஆவணங்களை வெளிப்படுத்தினார்.

நாட்டின் தற்போதைய அதிபரும், அந்த சமயத்தில் பாதுகாப்புச் செயலராகவும் இருந்த கோத்தாபய ராஜபக்ஷவுக்கு எதிராக சாட்சியமளிக்கவிருந்த நிலையில் அவர் பட்ட பகலில் படுகொலை செய்யப்பட்டார்.

தனது தந்தை படுகொலை செய்யப்பட்ட 12 ஆண்டுகள் ஆனாலும் அரசு அதை விசாரிக்கவோ அல்லது அவரது கொலைக்கு காரணமாக இருந்தவர்களையோ நீதியின் முன் நிறுத்தவில்லை என்று அகிம்சா விக்ரமதுங்க ஐ நா மனித உரிமைகள் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கொ நகரைத் தளமாகக் கொண்ட நீதிக்கும் பொறுப்புக் கூறலுக்குமான மையம் அவர் சார்பில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளது.


இதேவேளை தென்னாப்ரிகாவின் ஜொஹனஸ்பர்க் நகரிலிருந்து செயற்படும் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் (ITJP) அவரது படுகொலை மற்றும் விசாரணை குறித்து பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

"லசந்த விக்ரமதுங்கவின் அச்சமற்ற அறிக்கைகள் மூலம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு இன்னும் பதில்கள் வழங்கப்படவில்லை அதற்குப் பதிலாக அவரை மௌனிக்கச் செய்வதற்கு அவர் கொல்லப்பட்டார், அதேவேளை ஏனையவர்கள் அச்சுறுத்தப்பட்டனர் அல்லது நாடு கடந்து வாழ நிர்பந்திக்கப்பட்டனர்" என்று லசந்த விக்கிரமதுங்கவின் அச்சமற்ற அறிக்கைகள் மூலம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு இன்னும் பதில்கள் வழங்கப்படவில்லை அதற்குப் பதிலாக அவரை மௌனிக்கச் செய்வதற்கு அவர்.

"கொல்லப்பட்டார் அதேவேளையில் ஏனையவர்கள் அச்சுறுத்தப்பட்டனர் அல்லது நாடு கடந்துவாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்" என்று ஐவுதீ அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யாஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இலங்கையினால் மிக் விமானம் கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை செய்ய ஆரம்பித்து பதின்மூன்று வருடங்களுக்குப் பின்னரும் இந்த வியாபாரத்தில் களவாடப்பட்டதாக உக்ரைன் நாட்டு வழக்கறிஞரால் கூறப்பட்ட ஆறு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான பணத்திற்கு என்ன நடந்தது என்பதற்கு இன்னமும் பதில் இல்லை என்று ஐவுதீ அறிக்கை கூறுகிறது.

மிக் விமானங்கள் வாங்கிய முறைகேட்டில் தொடர்புடையவர் என்று


INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

8th January 2021

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

Press Release: Follow the Money – what happened to USD 6,143,000 misappropriated from Sri Lanka's arms deal?

Johannesburg: Thirteen years after newspaper editor Lasantha Wickrematunge began investigating the purchase of MiG aircraft by Sri Lanka, there is still no answer as to what happened to more than six million US dollars that the Ukrainian prosecutor said was misappropriated in the course of the deal. Instead, Lasantha was assassinated on 8 January

கருதப்படும் உதயங்க வீரதுங்க பல ஆண்டுகளாத் தலைமறைவாயிருந்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்க்'வின் ஒன்றுவிட்ட சகோதரரான உதயங்க தற்போது அவரது இணைப்புச் செயலராகச் செயற்படுவதாகக் கூறப்படுகிறது.

"இந்த ஆயூத வியாபார உடன்படிக்கை பற்றி விசாரணை செய்வதில் உயிரிழந்த ஒரு மனிதருக்கு அவரைக் கொலை செய்தவர்களை நீதிக்குமுன் கொண்டுவருவதும் வரி செலுத்துபவர்களின் மில்லியன் கணக்காக பணம் எங்கே காணாமற் போனது என்பது பற்றிக் கண்டுபிடிப்பதும் நாங்கள் அவருக்குச் செய்யவேண்டிய கடமையாகும். உதயந்த வீரதுங்க தான் குற்றமற்றவர் என நிரூபிக்கும் வரை எந்தவொரு அரசாங்கப் பதவிகளையூம் வகிக்க கூடாது." என்று யாஸ்மின் சூக்கா கூறியுள்ளார்.

# டொனால்ட் டிரம்ப் விரும்பினாலும் மீண்டும் அரச பதவிகளை வகிக்க முடியாது என்பது முடிவாகியுள்ளது?



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மீதான பதவி நீக்கத் தீர்மானம் அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் அமெரிக்க வரலாற்றில் இந்தத் தீர்மானத்திற்கு இரண்டாவது முறை முகம்கொடுக்கும் முதல் ஜனாதிபதியாக டிரம்ப் பதிவாகியுள்ளார். டொனால்ட் டிரம்ப்
அமெரிக்க பாராளுமன்றம் அமைந்திருக்கும் கெப்பிட்டல் கட்டடத்தில் கடந்த வாரம் டிரம்ப் ஆதரவாளர்கள் அத்துமீறி நுழைந்து கலகத்தில் ஈடுபட்டது தொடர்பில் டிரம்ப் மீது கலகத்தை தூண்டியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. தமது பொய்யான தேர்தல் மோசடி குற்றச்சாட்டு மூலம் வன்முறையை ஊக்குவித்ததாக பிரதிநிதிகள் சபை டிரம்ப் மீது குற்றம்சாட்டியுள்ளது.

இதன்படி டிரம்ப் அமெரிக்க பாராளுமன்றத்தின் மேலவையான செனட் சபையில் விசாரணைக்கு முகம்கொடுக்கவுள்ளார். எனினும் அவர் எதிர்வரும் 20ம் திகதி ஜனாதிபதி பதவியில் இருந்து விடைபெறவிருக்கும் நிலையில் அதற்கு முன்னர் இந்த விசாரணைகள் நடைபெறாது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தற்போது எழுந்துள்ள அரசியல் கொந்தளிப்பு நிறைந்த வேளையில் இந்த பதவி நீக்கத் தீர்மானத்திற்கு செனட்டில் போதுமான ஆதரவு கிடைத்தால் டிரம்பினால் மீண்டும் அரச துறை பதவிகளை வகிக்க முடியாமல் போகும் என்பது நிதர்சனமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 232 வாக்குகளும் எதிராக 197 வாக்குகளும் பதிவாகின. டிரம்பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். இந்த வாக்கெடுப்புக்குப் பின்னர் வீடியோ ஒன்றை வெளியிட்ட டிரம்ப், அமைதியை காக்கும்படி தமது ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்தார். எனினும் இந்த அழைப்பில் உண்மைத் தன்மை காணப்படவில்லை என்றும் சிஎன்என் போன்ற ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் வெற்றிபெற்ற ஜனாதிபதி வேட்பாளரான ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்கும் வரும் புதன்கிழமை 20ம் திகதி வொசிங்டன் டி.சி மற்றும் அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டிருப்பதாகவும் ஆயுதம் ஏந்திய போராட்டங்கள் இடம்பெறலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளமை அமெரிக்க அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்

அமெரிக்க வரலாற்றில் 2வது முறையாக நாடாளுமன்றத்தின் கண்டனத்துக்குள்ளான ஒரே அதிபர் டிரம்ப் அமெரிக்க வரலாற்றில் இரண்டாவது முறையாக நாடாளுமன்றத்தில் கண்டனத்துக்குள்ளாகி இருப்பவர் இவரே ஆவார். முடிவுகளை உறுதி செய்வதற்காக, நாடாளுமன்ற கூட்டுக் கூட்டம், கடந்த, 6ம் தேதி நடந்தது. அப்போது, டிரம்பின் ஆதரவாளர்கள், நாடாளுமன்ற வளாகத்துக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர். இந்த வன்முறைச் சம்பவத்தில், 5 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்தனர். டொனால்ட் டிரம்ப், வரும், 20ம் தேதி பதவியில் இருந்து விலக உள்ள நிலையில், வன்முறையைத் தூண்டும் வகையில் அவர் பேசியதால், அதிபர் பதவியில் இருந்து அவரை நீக்க வேண்டும் என்று, ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியது. இவ்வாறு பதவி நீக்கம் செய்தால் பிறகு அவர் பொது பதவியில் அமர முடியாது என்பதால் வருங்காலத்திற்காகவும் யோசித்து ஜனநாயக கட்சி இவ்வாறு ஒரு மூவ் எடுத்தது. மேலும், அரசியல் சாசனத்தின், 25வது பிரிவைப் பயன்படுத்தி, டிரம்பை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியது. இந்த கோரிக்கை துணை அதிபர் மைக் பென்சால் ஏற்கப்படவில்லை. வரலாற்று நிகழ்வு.. அமெரிக்க அதிபர் டிரம்புக்கு எதிரான நாடாளுமன்றத்தில் கண்டன தீர்மானம் நிறைவேறியது எனவே, நாடாளுமன்றத்தில், டிரம்ப்-க்கு எதிராக கண்டன தீர்மானம் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டது. பின்னர் வாகெடுப்புக்கு விடப்பட்டு இந்த இம்பீச்மென்ட் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. டிரம்ப்பின் பதவியை இனி செனட் சபைதான் தீர்மானிக்கும்.

இந்நிலையில் உண்மையான குற்றச் சம்பவத்தின் அடிப்படையில் டிரம்ப்புக்கு எதிராக விவாதம் நடந்தது என்று அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் ஜனநாயக கட்சி எம்பி ஜிம் மெகாகவர்ன் தெரிவித்தார். அமெரிக்க அதிபர் டிரம்புக்கு எதிரான கண்டன தீர்மானத்தின் மீது வேற்றப்பட்டது. விவாவதத்தின் போது அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் ஜனநாயக கட்சி எம்பி ஜிம் மெகாகவர்ன் பேசுகையில், அமெரிக்கா தாக்கப்பட்டுள்ளது. அமெரிக்கர்கள் பதிலடி கொடுக்க வேண்டும். உண்மையான குற்றச் சம்பவத்தின் அடிப்படையில் டிரம்ப்புக்கு எதிராக விவாதம் நடக்கிறது. ஜனநாயக செயல்முறையின் ஒருமைப்பாட்டை டிரம்ப் அச்சுறுத்தியுள்ளார். அமைதியான முறையில் அதிகாரப் பரிமாற்றத்தில் தலையிட்டிருக்கிறார் என்றும் அரசின் நடவடிக்கையை சீர்குலைப்பதிலும் டொனால்ட் ட்ரம்ப்பிற்கு பங்கு உள்ளது. எனவே டிரம்பை பதவியில் இருந்து நாம் நீக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றார்

அமெரிக்க நாடாளுமன்ற கட்டிடம் (கேபிடல்) தாக்கப்பட்டதற்கு டிரம்ப் தான் காரணம் என குற்றம்சாட்டி அவருக்கு எதிராக நீக்க கண்டன தீர்மானம் நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தது. விவாதத்திற்கு பின் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாக அமெரிக்காவில் பதற்றமான சூழல காணப்படுகிறது. இதையடுத்து பாதுகாப்பிற்கு துப்பாக்கிய ஏந்தி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். நாடாளுமன்றத்தில் அசம்பாவிதங்கள் நிகழாமல் தடுக்க பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதேபோல் வாிங்டனின் முக்கிய வீதிகள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றில் பாதுகாப்புக்கு போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அமெரிக்க அதிபர் டிரம் எந்தவொரு வன்முறையும் கூடாது. சட்டத்தை மீறகூடாது, எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளக்கூடாது. என்று நான் கேட்டுக்கொள்கிறேன் பதட்டங்களைத் தணிக்கவும் அமைதியைக் குறைக்கவும் அனைத்து அமெரிக்கர்களையும் நான் அழைக்கிறேன். நன்றி.□ என கூறியுள்ளார்.

ட்ரம்ப் மேற்கொண்ட விரும்பத்தகாத செயல்களினால் அல்லது அவரால் துர்ண்டிவிடப்பட்ட செயற்பாடுகளால் அதிருப்தியடைந்த சில சமூக ஊடக நிறுவனங்கள் ட்ரம்ப் மீது நடவடிக்கை எடுத்துவருகின்றன. இந்த சமூக ஊடகங்களின் வரிசையில் யூடியுப்பும் அவரை இடைநிறுத்தியுள்ளது. கூகுள் நிறுவனத்திற்குச் சொந்தமான யூடியுப், ட்ரம்ப் கணக்கில் புதிய வீடியோக்களை பதிவு செய்வதற்கும் நேரடி ஒளிபரப்புகளை மேற்கொள்வதற்கும் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு தடை கொண்டுவந்துள்ளது. இந்த இடைநிறுத்தக் காலம் மேலும் நீடிக்கப்படலாம் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

வன்முறைகளைத் தூண்டுவது தொடர்பான தமது விதிகளை ட்ரம்பின் யூடியுப் பக்கம் மீறி இருப்பதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. ட்ரம்ப் கடந்த செவ்வாய்க்கிழமை பல வீடியோக்களை பதிவிட்டதில் அதில் சிலது தொடர்ந்தும் பார்க்கக் கூடியதாக அவரது யூடியுப் பக்கத்தில் உள்ளது. அமெரிக்க பாராளுமன்ற கட்டடத்தில் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து ட்ரம்பின் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்கள் ஏற்கனவே இடைநிறுத்தப்பட்டிருப்பதோடு ட்விட்டரில் அவருக்கு நிரந்தரமாக தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் எதிர்வரும் 20ம் திகதி பதவியேற்கவு ள்ள ஜோ பைடன் எவ்வாறு தனக்கு எதிராக கிளம்பியுள்ள அச்சுறுத்தல்களை சமாளிக்கின்றார் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# சனாதிபதி கோட்டாபய இராசபக்ச வீட்டுக் கோழி முட்டை அம்மிக் கல்லை மட்டும் அல்ல மலையையே உடைக்கும்!

**-கனடா நக்கீரன்**

ஊரில் உள்ள சின்னத்தம்பிக்கோ பெரியதம்பிக்கோ பேய் பிடித்தால் பூசாரி வேலனைக் கொண்டு வேப்பிலை அடித்துப் பேயை ஓட்டலாம். ஆனால் பூசாரி வேலனுக்கே பேய் பிடித்தால் யாரிடம் போவது?

நாட்டை ஆளும் தலைவரே கொலை செய்து விடுவேன் எனக் காட்டமாகப் பேசினால் குடிமக்கள் யாரிடம் போய் முறையிடுவது?

”பாதுகாப்பு செயலாளராக தான் இருந்த போது பித்திகல சந்தியில் (Piththala Handhiya or Brass Junction) வைத்து தன்மீது குண்டுத்தாக்குதல் நடத்தி (01 டிசெம்பர், 2006) , புலிகளின் தலைவர் பிரபாகரன் “வேலை“யைத் தொடங்கியதாகவும் இறுதியில் பிரபாகரனைச் சுட்டுத்தள்ளி நந்திக் கடலிலிருந்து நாய் போல் இழுத்து வந்து பிணமாக அவரது கதையை முடித்து வைத்தேன்” என சனாதிபதி கோட்டாபய இரசபக்ச கோபாவேசமாகப் பேசியிருக்கிறார். பேசிய காலம் இந்த மாதம் 9 ஆம் நாள் (சனிக்கிழமை காலை). இடம் அம்பாறை, உகுண பிரதேசத்திலுள்ள லாத்துகல கிராமம். பொருள் ”கிராமத்துடன் உரையாடல்.” இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசும்போதுதான் வி.புலிகளின் தாக்குதல் சம்பவத்தைக் கோட்டாபய இராசபக்ச குறிப்பிட்டார். இந்தத் தாக்குதலில் தற்கொலைக் குண்டுதாரி உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர். 17 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன.



கோட்டாபய மேலும் பேசும் போது தான் எதற்கும் தயாரானவர் என்றும், அதே போல் (மற்றவர்களையும்) அந்த நிலைக்கு கொண்டுவர தன்னால் (இப்போதும்) முடியும் என்றார். ”எதற்கும் தயாராக இருக்கும் ஒரு கதாபாத்திரம் நான். போரில் செய்து காட்டியது போல தன்னால் அரசியல்வாதிகளுக்கும் செய்துகாட்ட முடியும்” என்பதுதான் அவரது பேச்சின் கருப்பொருள். 2009 ஆம் ஆண்டு மே 18 அன்று இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதி யுத்தம் நந்திக்கடல் பகுதியில் நடந்ததும், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் உடல் அப்பகுதியில் கிடைத்ததாக இலங்கை அரசு தெரிவித்தது நினைவு கூரத்தக்கது.

அது சரி. அந்த ”கிராமத்துடன் உரையாடல்” நிகழ்ச்சி ஒரு கிராமத்தில் நடந்தது. அங்கு வி.புலிகளில் தலைவர் பிரபாகரன் பற்றிப் பேச வேண்டிய முகாந்திரம் என்ன? அதுவும் கடும் கோபத்தோடு பேச வேண்டிய அவசியம் என்ன?

ஹரின் பெர்னாண்டோ (Harin Fernando) ஓர் இளம் இலங்கை அரசியல்வாதி. ஒக்தோபர் 28, 1978 இல் பிறந்தவர். இவர் இலங்கைக் குடியரசின், 7 ஆவது நாடாளுமன்றத்திற்கான 2010 பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சிசார்பில் பதுளை மாவட்டத்திலிருந்து மக்களால் முதல் தடவையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர். 2014 ஆம் ஆண்டில் ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடாளுமன்றப் பதவியைத் துறந்தார். மாகாணசபைத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகள் பெற்று ஊவா மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரானார். 2015 சனவரி 14 ஆம் நாள் ஊவா மாகாண சபையில் ஐதேக தனது பெரும்பான்மையை நிரூபித்ததை அடுத்து இவர் ஊவா மாகாண சபையின் முதலமைச்சராக ஆளுநர் நந்தா மத்தியூவினால் நியமிக்கப்பட்டார். மீண்டும் நாடாளுமன்றம் சென்ற அவர் 2015 செப்டம்பர் 4 அன்று தொலைத்தொடர்பு துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

சனாதிபதி கோட்டாபய இராசபக்ச, ஹரின் பெர்னாண்டோ அவர்களுக்கு எதிராக நெற்றிக் கண்ணைத் திறந்ததற்குக் காரணம் ஹரின் நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சு. அவர் கோட்டாபய இராசபக்சாவின் பெயரைக் குறிப்பிடும் போது நந்தசேன கோட்டாபய இராசபக்சா என்று விளித்துப் பேசிவிட்டாராம். அதாவது கோட்டாபய இராசபக்ச அவர்களின் முழுப் பெயரைக் குறிப்பிட்டு விட்டாராம்.

உண்மையில் விக்கிபீடியா போன்ற ஊடகங்கள் கோட்டாபய இராசபக்ச அவர்களின் பெயரை நந்தசேன கோட்டாபய இராசபக்ச (Nandasena Gotabaya Rajapaksa> என்றுதான் குறிப்பிடுகின்றன. சில ஊடகங்களும் அவரது முழுப்பெயரைக் குறிப்பிடுகின்றன. நாடாளுமன்றத்தில் பேசிய நா.உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் சனாதிபதியின் முழுப்பெயரையும் குறிப்பிட்டார்.

அப்படியென்றால் ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் கோட்டாபய இராசபக்சவின் முழுப் பெயரை குறிப்பிட்டுப் பேசியதில் என்ன தவறு இருக்கிறது? அவருக்குக் கொலைப்பயமுறுத்தல் விடுவதற்கு என்ன காரணம்? ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்துக்கு உள்ளே பேசுவதை யாரும் தட்டிக் கேட்க முடியாது. நீதிமன்றங்கள் கூடக் கேட்க முடியாது. அது அந்த உறுப்பினரின் நாடாளுமன்றச் சிறப்புரிமை (parliamentary privilege) ஆகும். இருந்தும் ஹரின் பெர்னாண்டோ பொலீஸ் மா அதிபருக்கு எழுதிய நீண்ட கடிதத்தில் தனக்கு மரண அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளதால் தனக்குப் போதிய பாதுகாப்பினை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்தக் கோரிக்கையை நாமல் இராசபக்ச ஆதரித்துள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு சரியாக 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், தன்னைச் சனாதிபதி அச்சுறுத்தியதைச் சுட்டிக் காட்டிய ஹரின் பெர்னாண்டோ “ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்த 2.8 மில்லியன் வாக்காளர்கள் சார்பாக சுதந்திரமாக கருத்து வெளியிடுவதற்கான தனது உரிமையை பாதுகாக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

சனாதிபதி கோட்டாபய இராசபக்சவினால் “அவர் அவரது கடமைகளை சரியாகத் தொடர்ந்து சரிவர நிறைவேற்றாத பட்சத்தில் எனது உயிருக்கு என்ன ஆபத்து இருந்தாலும் அவர் விரும்பாவிட்டாலும் உண்மையைத் தொடர்ந்து சொல்வதன் மூலம் எனது கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றுவேன். எனவே, இந்த விடயத்தை உங்கள் அவசர கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். பாதுகாப்புப் படைகளின் தளபதியும் பாதுகாப்பு அமைச்சருமான சனாதிபதி கோட்டாபய இராசபக்ச, முன்வைக்கும் அச்சுறுத்தலின் தீவிரத் தன்மையைக் கருத்தில் கொண்டு, அவர் எனக்கு தீங்கு விளைவிக்கும் ஆற்றல் இருப்பதாகக் குறிப்பிடும்போது அவரை மேலும் ஐயப்பட எனக்கு எந்தக் காரணமும் இல்லை. ஆனால் முதல் பெயரை குறிப்பிடுவதைக் கேட்டு ஜனாதிபதி குழப்பமடைவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது’’ எனத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மீது எந்த விதமான மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி அதனைத் தம்மீதான தாக்குதலாக கருதுவார்கள் என அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

”ஐக்கிய மக்கள் சக்தி வேறு அரசியல் சக்திகளைப் போன்றது அல்ல, ஐக்கியமாகவும் இணைந்தும் சகோதரத்துவமாகச் செயற்படும் அரசியல் கட்சி. ஹரின் பெர்னாண்டோ தனது உரிமையைப் பயன்படுத்தி, அவரது கருத்தை முன்வைத்தார். மக்களின் பிரதிநிதி என்ற வகையில் அவர் இந்தக் கருத்தினை முன்வைத்தார். நாட்டின் குடிமகனாக முன்வைத்த கருத்து. அவரது இந்தக் கருத்துக்கு அச்சுறுத்தல்கள், தடைகள், எதிர்ப்புகள், ஆத்திரமூட்டும் செயல்கள் நடக்குமாயின் அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.’’ ”மக்கள் பிரதிநிதிகளினது மாத்திரமல்ல மக்களின் கருத்துச் சுதந்திரத்திற்காக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் போராடும். அந்த உரிமையை பாதுகாக்க பற்றுறிதியுடன் செயற்படுவேன்.

”இந்த சந்தர்ப்பத்தில் ஹரின் பெர்னாண்டோவின் பாதுகாப்புக்காக கட்சி மற்றும் சக்தியாக அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்த இணைந்து செயற்படுவோம். அவர் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டால், அதனை எம்மீதான தனிப்பட்ட தாக்குதலாகவே கருதுவோம். அவர் முற்போக்கான தற்போதைய தலைமுறையின் தலைவர், எதிர்காலத் தலைவர். அவருக்கு ஏதோ ஒரு வகையில் சேதம் ஏற்படுமாயின் அதற்குத் தற்போதைய சனாதிபதியும் அரசாங்கமும் பொறுப்புக் கூற வேண்டும்.

*(தொடர்ச்சி 14ம் பக்கம்)*

# புனிதமான நினைவிடங்களை அழிப்பவர்களுடன் எப்படி இணைந்து வாழ்வது என்கிறார் எழுத்தாளர் தீபச்செல்வன்



பல்கலைக்கழகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூண்.

இலங்கையின் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு சின்னம் கடந்த ஜனவரி 8-ம் தேதி இரவோடு இரவாக இடிக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து விகடனுக்காக தனது கருத்துகளை இங்கே பதிவுசெய்கிறார் ஈழத் தமிழ் எழுத்தாளர் தீபச்செல்வன்.

“ஈழத்தில் கண்ணுக்குத் தெரி-யாத யுத்தம் நிகழ்கிறது” எனப் பலரும் எடுத்துரைத்து வருகிறார்கள். எறிகணைகளின்றி, துப்பாக்கிகளின்றி, இரத்தம் சிந்தாத வகையில் ஈழத் தமிழ் இனத்தை ஒடுக்கும் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. கல்வி, நிர்வாகம், நில ஆக்கிரமிப்பு, அதிகாரம், நோய் எனப் பலவழிகளில் அது தொடர்கிறது. அப்படி ஒரு நடவடிக்கையாகத்தான் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு ஸ்தூபி அழிப்பும் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சிதைத்த இலங்கை அரசு, தமிழர்களுக்கு இனி எந்தப் பிரச்னையும் இல்லை என்ற தோற்றத்தைக் காண்பிக்க முனைகிறது. அத்துடன் இன்னொரு உண்மையையும் புதைக்கும் முயற்சி நடக்கிறது. “இன ஒடுக்குமுறைகளால்தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது” என்ற விஷயத்தை மறைத்துவிட அரசு நினைக்கிறது. ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே “தமிழர்களுக்கு சுவர்க்க வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறோம்” என்ற தோரணையில் இலங்கை அரசு பேசிவந்தது. 2009 யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், தமிழர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்ததாக சொன்னார் அன்றைய அதிபர் மகிந்த ராஜபக்சே. மிகப்பெரிய இனப்படுகொலையை மனிதாபிமானத்தின் பெயரில் செய்து முடித்த ராஜபக்சே, “முள்வேலி” என்ற கொடும் நரகத்தை மறுவாழ்வு என்ற பெயரில் கையளித்தார். இப்போதும்கூட, “தமிழர்களுக்கு என்ன பிரச்னை, அவர்கள் ஏன் இன்னும் போராடுகிறார்கள்?” என்று சிங்களப் பேரி-னவாதிகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றுபட்ட நாட்டுக்குள் சுயாட்சியை கோரும் தமிழர்களைப் பார்த்து, “தனிநாடு கேட்கிறீர்கள்” என்கிறார்கள்.

இங்கே என்ன நிகழ்கிறது என்பதை மறைத்துப் பேசுவதுடன் தமிழர்கள் என்ன கேட்கிறார்கள் என்பதை திரித்துப் பேசுவதுதான் சிங்களப் பேரினவாதத்தின் இயல்பு. ஈழத் தமிழர்கள் ஒன்றரை லட்சம் பேர் முள்ளிவாய்க்கால் போரில் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இப்போதும் எங்கள் வாழ்வு, இல்லாமல் ஆக்கப்பட்டவர்களுடன்தான் கழிகிறது. எங்கள் நினைவின் வழி அவர்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். இன அழிப்பில் கொல்லப்பட்டவர்களின் வாழ்க்கை முடிவு என்பது இயற்கை மரணத்தால் வரும் முடிவு போலல்ல. அவர்கள் பற்றி இன்னும் எங்களுக்கு முடிவு தெரியவில்லை. அதனால் அவர்கள் நம் வாழ்வின் ஒரு பகுதியாகத்தான் இருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் மண்ணில் துடிதுடிக்க இறந்த குழந்தை ஒன்றை புதைக்காமல் துரத்தப்பட்ட தாயொருத்தி, அக்குழந்தையின் மரணத்தை ஏற்பதற்கு இனப்படுகொலைக்கான நீதி தேவை. நந்திக்கடலில் சிங்கள ராணுவத்திடம் கையளிக்கப்பட்ட பிள்ளையை இப்போது காணாமல் ஆக்கிவிட்டோம் என கைவிரிக்கிறது அரசு. தன் பிள்ளையை விடுவிக்கும் வரையில் காத்திருக்கும் தாயின் நம்பிக்கையில் அப்பிள்ளை வழி தேடிக் கொண்டே இருப்பார். அப்படித்தான் போரில் அழிக்கப்பட்டவர்கள், எங்கோ வாழ்வது போலொரு நினைவுகள் இம்மண்ணில் வாழ்கின்றன.

இனப்படுகொலையில் அழிக்கப்பட்டவர்களின் நினைவுகளை அழிப்பது என்பது, இலங்கை அரசாங்கத்தின் கண்ணுக்குத் தெரியாத யுத்தம். கடந்த ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு, கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை பயன்படுத்தி பல தடைகளை விதித்தது இலங்கை அரசு. அழிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சில கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இடத்துக்கு, பல நூறு கிலோ மீட்டர்கள் சுற்றி, தடைகளைக் கடந்து முள்ளிவாய்க்கால் சென்றேன். அதற்கு அடுத்து, மாவீரர் தினத்தை நினைவுகூருவதற்கும் கொரோனா தடுப்பு சட்டத்தையும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் இலங்கை அரசு உபயோகப்படுத்தியது. தமிழர்கள் போருக்குச் சென்று களத்தில் மாண்ட பிள்ளைகளை நினைத்து அழுது கண்ணீர் விடுகிற நிகழ்வுதான் அது. போரில் சகலமும் இழந்து உடைந்துபோன தாயின் கண்ணீர், இந்தத் தீவை இரண்டாக்கி விடும் என அஞ்சுகிற அரசை என்ன சொல்வது? மாவீரர் துயிலும் இல்லங்களில் படைகளைக் குவித்து தடை விதிக்கப்பட்டது. கார்த்திகை விளக்குகளைக்கூட கால்களால் எட்டி உதைத்து செய்கிற போரின் மத்தியில்தான் நாம் வாழ்கிறோம்.

கடந்த காலத்தில் ஆட்சி புரிந்த அரசாங்கம், போரில் கொல்லப்பட்ட பொதுமக்களையும் மாண்டுபோன புலிகளையும் நினைவுகொள்கிற உரிமையை அதிகாரபூர்வமற்ற முறையில் வழங்கியது. அது தமிழர்களைப் பொறுத்தவரையில் ஓர் ஆற்றுப்படுத்தலாக இருந்தது. இத்தகைய அணுகுமுறைகள் போரின் கொடுமைகளை மறந்து சிங்கள மக்களுடன் சிநேகம் கொள்ளுகின்ற ஒரு மனநிலையை ஏற்படுத்தியது. சிங்கள மக்களுக்கும் அச்சூழல் ஒரு புரிதலை ஏற்படுத்தக்கூடும். இன ஒடுக்குமுறை நினைவிடங்களும் போரின் தடங்களும் சிங்கள மக்களுக்கும் புரிதலை ஏற்படுத்தும். அதுவே அரசுக்கும் சிக்கல்.



இலங்கையின் ஆட்சியை மீளக் கைப்பற்றிய ராஜபக்சே குடும்பத்தின் புதிய அதிபர் கோட்டாபாய ராஜபக்சே, தமிழர்களின் நினைவுகூறும் அனைத்துவிதமான உரி-மைகளையும் பறித்தார். ராஜபக்சே தரப்பினரைப் பொறுத்தவரையில், முள்ளிவாய்க்காலில் தம்மால் கொன்றழிக்கப்பட்ட ஈழ மக்களும் ஒன்றுதான். இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போரிட்டு மாண்ட புலிகளும் ஒன்றுதான். அதனால்தான் அனைத்து நிகழ்வுகளையும் தடுத்து வருகிறார்கள்.

இதன் ஓர் அங்கமாகத்தான் யாழ் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவு ஸ்தூபி அழிக்கப்பட்டது. கடந்த 8-ம் திகதி, இரவோடு இரவாக சட்டவிரோதமான முறையில் முள்ளிவாய்க்கால் நினைவு ஸ்தூபி அழிக்கப்பட்டது. சுயாட்சித் தன்மை கொண்ட பல்கலைக்கழகங்களில் அரசாங்கமும் ராணுவப் படைகளும் இப்படி காடைத்தனம் செய்ய முடியாது. “நினைவு ஸ்தூபியை தாம் அழிக்கவில்லை” என்று ராணுவமும் அரசும் சொல்கின்றன. “துணைவேந்தர் சற்குணராஜாதான் இந்த முடிவை எடுத்தார்” என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறுகிறது. அரசின் அழுத்தங்களால்தான் இந்த முடிவுக்கு துணைவேந்தர் வந்திருக்கிறார். அரசப் படைகளின் பாதுகாப்புடன்தான் ஸ்தூபி அழிக்கப்பட்டது.

ஸ்தூபி இடிக்கப்பட்ட இடத்தில் கல் வைக்கும் துணை வேந்தர் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றில் மாணவத் தலைவர்களுக்கும் துணைவேந்தர்களுக்கும் ஒரு மதிப்பு இருக்கிறது. பேராசிரியர் துரைராஜா ஈழ விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களிப்பு செய்த துணைவேந்தர். அவர் விடுதலைப் புலிகளால் “மாமனிதர்” என்று கௌரவிக்கப்பட்டவர். “இன்றைக்கு ஒரு மனிதராகக்கூட இல்லாமல் நினைவு ஸ்தூபியை அழிக்க சற்குணராஜா அனுமதி வழங்கியுள்ளார்” என்பதே ஈழத் தமிழர்களின் கொந்தளிப்பு.

நினைவு ஸ்தூபியை சத்தமன்றி அழித்துவிடலாம் என்று நினைத்த அரச தரப்புக்கு, அதனால் ஏற்பட்ட எழுச்சிதான் பெரிய அதிர்ச்சியை அளித்திருக்கிறது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர். அதற்கு ஈழத் தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் ஆதரவு வழங்கியதுடன் இன்று 11-ம் திகதி வடக்கு கிழக்கு மாநி-லம் முழு அடைப்பு போராட்டத்தில் இருக்கிறது. இந்த நிலையில், அழிக்கப்பட்ட நினைவுத் ஸ்தூபியை மீள அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஸ்தூபியை அழித்ததாகச் சொல்லப்படும் துணைவேந்தரையே, அந்த அடிக்கல்லை நாட்ட வைத்திருக்கிறார்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள். மாணவர்களின் போராட்டத்தினாலும் உலகத் தமிழர்களின் எழுச்சியினாலும் முள்ளிவாய்க்கால் நினைவு ஸ்தூபி மீள எழுகிறது.

இந்தப் பிரச்னை தமிழ்நாட்டில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியதாலும், அரசாங்க மேலிடம் சுமுகமாகத் தீர்க்கச் சொன்னதாலும்தான், மீளவும் நினைவு ஸ்தூபியை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. “இன்னமும் இலங்கைப் பிரச்னையில், தமிழ்நாட்டிற்கு ஒரு வகிபாகம் இருக்கின்றது” என்று மலை-யகத் தமிழ் தலைவர் மனோ கணேசன் கூறியிருப்பதுதான் உண்மையும் நம்பிக்கையும்கூட. நினைவு ஸ்தூபி அழிக்கப்பட்டவுடன் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அதனைக் கண்டித்துக் குரல் கொடுத்தமை முக்கியமான விசயம். அதேபோல தமிழகத் தலைவர்கள் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டார்கள். முள்ளிவாய்க்கால் நினைவுத் தூண் அடிக்கல். முஸ்லீம் தலைவர்களும் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளதுடன், நினைவு ஸ்தூபி அழிப்புக்கு எதிரான போராட்டத்திற்கும் ஆதரவு அளித்துள்ளனர். சிங்கள மக்கள் மத்தியிலும் இச்செயல் எதிர்ப்பை கிளப்பியுள்ளது. அனுரகுமார திஸாநாயக்கா என்ற எம்.பி கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் ஹரி ஆனந்தசங்கரி என்ற கனடா நாட்டு தமிழ் எம்.பி.யும் இதனைக் கண்டித்தார். அத்துடன், வெளிநாடுகளைச் சேர்ந்த பல அரசியல் தலைவர்கள் இலங்கை அரசி-ன் அநாகரியச் செயலைக் கண்டித்தார்கள். வெளிநாடுகளில் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்களும் வெடித்திருக்கின்றன. கிணறு வெட்டப் போய் பூதம் கிளம்பிய கதையாக இலங்கை அரசுக்கு பெரும் எதிர்ப்பும் அரசியல் சிக்கலும் ஏற்பட்டிருக்கிறது. தமிழர்கள் எந்த நிலையில் வாழ்கிறார்கள் என்பது உலகத்துக்கு இதனால் உணர்த்தப்பட்டிருக்கிறது. தமிழர்களின் மீளா நினைவுக-ளுடன் போர் செய்கின்ற கொடுமையான அரசு இலங்கை அரசு என்பதும் மீண்டும் உணர்த்தப்பட்டிருக்கிறது. கொல்லப்பட்டவர்களின் நினைவிடத்தை அழிப்பவர்களுடன் ஈழத் தமிழர்கள் எப்படி இணைந்து வாழ்வது? அன்றைக்கு ஈழ மக்களை ஸ்ரீலங்கா பிரஜைகளாக நினைத்திருந்தால், இலங்கை அரசு அவர்களைக் கொன்றிராது. இன்றைக்கேனும் சிங்கள பேரினவாத மனநிலையில் மாற்றம் நிகழ்ந்திருந்தால் இந்த ஸ்தூபி அழிக்கப்பட்டிராது.

ஈழத் தமிழரின் நினைவேந்தல் உரிமைக்காக ஒன்றிணைந்த உலகத் தம-ிழினம், இதே ஒற்றுமையுடன் ஈழ இனப்படுகொலைக்கான நீதிக்கும் தமிழரின் சுயாட்சிப் போராட்டத்திற்கும் குரல் கொடுத்தால், ஈழ மக்களுக்கு விரைவில் சுதந்திரம் பிறக்கும்.

**- தீபச்செல்வன்**

***நன்றி: விகடன் தமிழ்நாடு***

## "வீட்டிலேயே இருங்கள்" சட்டத்தை மீறுவோரை கண்காணிக்கும் அதிகாரம் பொலிசாருக்கு இல்லை என்கிறது ஒன்றாரியோ அரசு



நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு தொடக்கம் ஒன்றாரியோ மாகாணம் எங்கும் அமுல் செய்யப்பட்டுள்ள “வீட்டிலேயே இருங்கள்“ சட்டத்தை மீறுவோரை கண்காணிக்கும் அதி-காரம் பொலிசாருக்கு இல்லை . அதனை மீறுவோரை கண்காணிக்குவும் தணடிக்கவும் வேறு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் . இவ்வாறு யாரையாவது பொலிசார் வீதிகளில் மறித்து விசாரித்தால் அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமு இல்லை ” என ஒன்றாரியோ அரசு விடுத்துள்ள அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புக்கள் நிறைந்த முழுமையான அறிக்கையை ஒன்றாரியோ மாகாண முதல்வர் கடந்த செவ்வாய்கிழமையன்று தனது அமைச்சர் சகிதம் மாகாணப் பாராளுமன்ற வளாகத்தில் வெளியிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் தொடர்பாக ஒன்றாரியோ அரசாங்கம் மாகாணத்தில் உள்ள அனைத்து பிராந்திய பொலிஸ் தலைமை அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது, தற்போது நியமிக்கப்பட்டுள்ள சட்டங்கள் பேணப்படுவதை அவதானிக்கும் அதிகாரிகளுக்கும் பொலிசாருக்கும் முரண்பாடுகள் தோன்றாமல்இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளதுஇ

நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ள அவசரகால சட்டத்தின்படி, அத்தியாவசிய தேவைகள் என்ற பகுதிக்குள் உள்ளவையாவன எதுவென்று கூறப்பட்டுள்ளது. மருந்தகம் அல்லது உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு செல்வது மற்றும் உடல்நலமின்மை காரணமாக வைத்தியசாலைகளுக்கு செல்வது, போன்றவை அடங்கும் எனக் கூறப்பட்டுள்ளது என்றும் ஆனால் இந்தவிதமான பயணங்களை மேற்கொள்வோர் அவற்றிக்கான சரியான ஆதாரங்களைக் காட்டவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# துணைவேந்தரின் பணி துரோகம் செய்வதல்ல!




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு என்று ஒரு தனித்துவமும் வரலாறும் இருக்கிறது. அதற்காக பல மாணவர்களும் பேராசிரியர்களும் பல தியாகங்களை செய்திருக்கிறார்கள். குறிப்பாக தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஜனநாயக அறிவுத் தளமாக யாழ் பல்கலைக்கழகம் பெரும் பங்களிப்பை செய்திருக்கிறது. பொங்கு தமிழ் என்ற உயரிய போராட்டத்தின் வழியாக ஈழ விடுதலைக்கு பலம் சேர்த்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இன்றைய நிலை என்பது பெரும் சோகத்தையும் அழுத்தத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த எட்டாம் திகதி இரவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இரவோடு இரவாக திருட்டுத்தனமாக அழிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வாசலில் சிங்கள அதிரடிப்படையினர் குவிக்கப்பட்ட நிலையில் மாணவர்களை உள்ளே அனுமதிக்காது நினைவுத் தூபியை ஜேசிபி கொண்டு அழிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசும் அதன் படைகளும்தான் நினவுத் தூபியை அழித்துள்ளதாக மாணவர்கள் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஸ்ரீலங்கா இராணுவத்தளபதி சவேந்திர சில்வா, முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அழிப்புக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று சொல்லியுள்ளார். அத்துடன் நினைவுத் தூபியை அழிக்கும் தீர்மானத்தை எடுத்தது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் என்று இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருக்கிறார். சிங்கள மாணவர்கள் அங்கு கல்வி கற்பதற்காக இந்த முடிவை சற்குணராஜா எடுத்திருப்பதாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சொல்ல வைக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்கள் சுயாதீனத் தன்மை கொண்டவை. அப்படியான பல்கலைக் கழகங்களால்தான் நாட்டுக்குரிய சிறந்த பட்டதாரிகளை உருவாக்க முடியும். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சற்குணராஜா தனது அற்ப பதவிக்காக மாபெரும் துரோகத்தைப் புரிந்துள்ளார். உண்மையில் தமிழர்களுக்கு எதிராக சிங்களத்திற்கு ஆதரவாக துரோகம் புரிவதைத்தான் தனது பணி என சற்குணராஜா கருதுகிறார் போலிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி என்பது போரில் கொல்லப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் அவர் தம் உறவினர்களின் நினைவாக அமைக்கப்பட்டது. அங்கே, மாணவர்கள் கண்ணீர் விட்டு வணங்கி தமது உள்ளத்தை ஆற்றுப்படுத்துகின்றனர். இது சற்குணராஜாவுக்கும் சிங்கள அரசுக்கும் எந்த வகையில் எதிரானது? அல்லது எந்த வகையில் இன நல்லிணக்கத்திற்கு எதிரானது? இந்த நினைவுத் தூபியை அழிப்பதன் மூலம் போரில் பல இலட்சம் மக்களை தாம் கொன்று இன அழிப்பு செய்தோம் என்பதை சிங்கள அரசு ஒப்புக் கொள்ளுகின்றதா?

போருக்குப் பின்னர், தமிழர்களின் தாயகத்தை கைப்பற்றிய சிங்கள அரசு, பல போர் வெறியை தூண்டும் நினைவுத் தூபிகளை தமிழர்களின் மண்ணில் அமைத்துள்ளது. கிளிநொச்சி டிப்போ சந்தியில், மாபெரும் போர் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல புதுமாத்தளனின் போர் வெற்றி வெறியுடன் துடிக்கும் சிங்கள இராணுவத்தின் மிகப் பிரமாண்ட சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போல ஆனையிறவிலும் போரில் தமிழ் மக்களை அழித்த வெற்றியை வெளிப்படுத்தும் பாரிய தூபி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் தமிழர் நெஞ்சில் முள்ளாய் குத்திக் கொண்டிருக்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்டு மாண்ட போராளிகளின் துயிலும் இல்லங்களில் விளக்கேற்றும் உரிமையை இந்த ஆண்டு சிங்கள அரசு தடை செய்தது. நவம்பர் 27 அன்று எமது உறவுகள் கண்ணீர் விட்டு அழுது ஒரு தீபம் ஏற்றுவதால் புதைக்கப்பட்ட புலிகள் எழுந்து வருவார்கள் என்ற அச்சத்தில் மாவீரர் நாளை சிங்கள அரசு தடை செய்தது. இப்போது போரில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியையும் அழித்துள்ளது இலங்கை அரசு.

தமிழ் மக்களை இலங்கையர்கள் இல்லை என்று வெளிப்படுத்தும் இந்தப் போக்கு, தமிழ் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்பு அரசுக்குள் அடிமை கொள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும் அவர்களுக்கு எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம் என்பதையும் நன்றாக வெளிப்படுத்துகின்றது. இத்தகைய ஜேசிபிக்கள் நாளை கிராமங்களுக்குளற் நுழைந்து ஈழத் தமிழ் மக்களையும் மண்ணோடு மண்ணாக புதைத்து இன அழிப்பு செய்கின்ற இழிநிலைக்கு தள்ளப்பட்டாலும் எந்த ஆச்சரியமும் இல்லை என்பே இங்கே புலனாகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல மாணவர்கள் உயிர்தியாகம் செய்துள்ளனர். ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் அவர்கள் தம் உயிரை ஈந்துள்ளனர். அதைப் போல பல பேராசிரியர்கள் தமது அறிவுழிப் பாதையில் நின்றபடி தேசியப் போராட்டத்திற்கு வழங்கிய ஒத்துழைப்புக்களும் அதற்காக சந்தித்த நெருக்கடிகளும் பலவுண்டு. துரைராஜா என்ற மாமனிதரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆளுமை மிக்க துணைவேந்தராக பணியாற்றி தனது பெயரை வரலாறாகப் பதித்துள்ளார்.

அத்தகைய மாமனிதர்களின் மத்தியில், ஒரு மனிதராக கூட இருக்கத் தவறியுள்ளார் சற்குணராஜா. அப்படி இருந்திருந்தால் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அழிப்பதற்கு அனுமதித்திருக்க மாட்டார். தனது அற்ப பதவிக்காக ஈழத் தமிழர்களின் இதயங்களை நொருக்கிய சற்குணராஜா தனது பதவிக்காக மாபெரும் துரோகத்தை இழைத்து தன் பெயரை தானே அழித்துள்ளார். யாழ் பல்கலைக்கழக சமூகத்திற்கு மாத்திரமின்றி, ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்திற்கே துரோகம் இழைத்த சற்குணராஜா உடனடியாக பதவி விலக வேண்டும்.

கடந்த காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர்களின் காப்பரணாக விளங்கியது. பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்களுக்கு பாதுகாப்பு இருந்தது. முன்னர் இருந்த துணைவேந்தர்கள் மாணவர்களை காக்கும் காவலரணாக செயற்பட்டுள்ளனர். ஆனால் சண்குணராஜாவோ, காட்டிக் கொடுக்கும் வேலையை செய்திருக்கிறார். சற்குணராஜாவை முழுச் சமூகமும் புறக்கணிக்க வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அவரை பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

அதேபோல இனிமேல் எந்தவொரு சமூக நிகழ்வுகளுக்கும் சற்குணராஜாவை அழைக்காமல் அவரை தனிமைப்படுத்த வேண்டும். இனத்திற்கு எதிரான, நினைவுகொள்ளுகின்ற பண்பாட்டுக்கு எதிரான ஒருவர் எந்த வித்திலும் முன்னுதாரணமற்றவர். அவரை புறக்கணிப்பதே அவருக்கான தண்டனை. தமிழ் சமூகம் வழங்கும் தண்டனைகளை கண்டு பதவிக் கதிரையில் இருக்காமல் சற்குணராஜா பதவி விலகுகின்ற நிலைக்கு அவரை தள்ள வேண்டும்.

அத்துடன் அழிக்கப்பட்ட கற்களை கொண்டு மீண்டும் நினைவுத் தூபி ஒன்றை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்புதுடன் வடக்கு கிழக்கு முழுவதும் இதுபோன்ற நினைவுச்சின்னங்களை அமைக்க வேண்டும். பாடசாலைகளிலும் நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் இன அழிப்பின் சின்னங்களை அமைத்து சிங்கள அரசின் இன அழிப்பை இந்த உலகத்திற்கு அம்பலப்படுத்த வேண்டிய போராட்டங்களையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத் தலைவர்கள் பலரும் இந்த செயற்பாட்டுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். மனித தன்மையற்ற இந்த செயலை மனிதமுள்ள எவரும் கண்டிப்பர். சர்வதேச சமூகம் இதுபோன்ற செயல்களை வேடிக்கை பார்ப்பது வருத்தம் தருகின்றது. சிங்கள அரசின் கொடுமைகளுக்குள் ஈழத் தமிழினம் சிக்கி அழிவதை வேடிக்கை பார்க்காமல் உண்மையான மனிதாபிமானம் கொண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுகின்ற தேவை அவசியமாகியுள்ளது. 2009இற்குப் பிறகு அப்படி பல அனுபவங்களை தமிழ் மக்கள் கண்ட போதும் அதற்கு எந்தவொரு தீர்வுகளும் முடிவுகளும் காணப்படவில்லை.

ஈழத் தமிழினம் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி தகர்ப்பு வெளிப்படுத்தியுள்ளது. கற்களுக்கும் கட்டிடங்களுக்கும் இந்த நிலை என்றால் இங்குள்ள மனிதர்கள் எத்தகைய ஆபத்தின் மத்தியில் வாழ்கிறார்கள் என்பதை உலகம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்களுக்கான எதனையும் அனுமதிக்காத ஸ்ரீலங்கா அரசுடன் ஈழத் தமிழர்கள் ஒருபோதும் சேர்ந்து வாழ முடியாது. தம்மை தாம் ஆளுகின்ற தமது மகிழ்ச்சியையும் துயரங்களையும் வெளிப்படுத்துகின்ற ஒரு வாழ்வு என்பது வடக்கு கிழக்கு என்ற தமிழர் மண்ணில் தனி ஆட்சியில்தான் சாத்தியம். இதுபோன்ற கொடூரச் செயல்களின் மூலம் சிங்களமும் அதையே உணர்த்துகிறது.

☾ தீபச்செல்வன்

# கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் கடுமையான அவசரகால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

## “வீட்டிலேயே இருங்கள்” என்னும் கடும் எச்சரிக்கை



கனடாவில் ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமையன்று மாகாணம் முழுவதற்குமான அவசரகால உத்தரவை பிறப்பித்துள்ளார். இந்த அறிவிப்பை செவ்வாய்க்கிழமையன்று மதியத்திற்கு சற்று பின்னர் அறிவித்த முதல்வர், மாகாணத்தில் எழுந்துள்ள கோவிட்-19 தொற்றின் அதிகரிப்பை எதிர்கொள்வற்காகவும், மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காகவும் இந்த முடிவை தானும் தனது அமைச்சரவையும் எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பின் படி முதற்படியாக மாகாணத்தில் மக்கள் நடமாட்டத்தை குறைப்பதற்காக “வீட்டுக்குள்ளே இருங்கள்” என்ற கடுமையான அறிவிப்பையும் முதல்வர் விடுத்துள்ளார்.

இதற்கான முதன்மைக் காரணங்களை அறிவித்த முதல்வர் முக்கியமாக கடந்த இருவாரங்களில் மாகாணத்தில் கோவிற்-19 தொற்றாளர்கள் இரண்டு மடங்காக அதிகரித்து பெரிய அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும், இதன் மூலம் மாகாணத்தின் அதிகமான வைத்தியசாலைகளில் அதிகளவு நெருக்கடிகளை ஏற்படுத்தியிருப்பதாகவும், அதற்கு அடுத்தபடியாக இங்குள்ள முதியோர் இல்லங்களிலும் அதிகமான உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளதாகுவும், எனவே கோவிற்-19 தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டிய மா பெரும் பொறுப்பு தமக்கு உண்டெனவும் அவர் தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் மக்களை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ள இந்த அறிவிப்பை முதல்வர் டக்போர்ட் அவர்கள் மாகாண பாராளுமன்றத்தில் முன்வைத்த போது, அவருட்ன் மாகாணத்தில் பிரதி முதல்வரும் சுகாதார அமைச்சருமான கிறிஸ்ரின் இலியட், நீதித்துறை அமைச்சர் சில்வியா ஜோன்ஸ்ஈ மாகாணத்தின் பிரதம மருத்துவ அதிகாரி டாக்டர் டேவிற் வில்லியம்ஸ் ஆகியோர் உட்பட பலர் கூட இருந்து தங்கள் கருத்துக்களையும் தெரிவித்தனர்.

முதல்வர் டக்போர்ட் தொடர்ந்து உரையாற்றுகையில் “மாகாணத்தில் பிந்திக் கிடைத்த மருத்துவ பரிசோதனை பெறுபேறுகளின் படி, தொற்றாளர்கள் அதிகரிப்பதால், வைத்தியசாலைகள் இடநெருக்கடிகளைச் சந்தித்துள்ளன. முன்வரிசைப் பணியாளர்கள் ஆகியோர் மிகவும் நிரமங்களைச் சந்திக்கின்றனர். இந்த நிலையில் நாம் உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், நாம் விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெறலாம் என எமது மருத்துவக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

எனவே தான் இந்த வீட்டிலேயே இருங்கள் என்ற கடுமையான உத்தரவை பிறப்பிக்க வேண்டியுள்ளது இந்த உத்தரவிற்கு இணங்க மக்கள் தங்கள் அவசர மற்றும் அவசியமான தேவைகளுக்கு மட்டுமே வெளியே செல்லலாம் என்ற கட்டுப்பாட்டை நாம் விதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. முக்கியமான இரவு நேரங்களில் தேவைகள் எதுவும் இல்லாமல் வெளியே செல்வது சட்டத்திற்'கு முரணான செயல் என அவர்கள் தண்டிக்கப்படவும் நேரிடலாம்” என்றும் தெரிவித்தார்.

மேலும் ஜனவரி மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 12.01 மணி தொடக்கம் இந்த “வீட்டற்குள் இருங்கள்” என்ற உத்தரவு அமுலுக்கு வருகின்றது இந்த உத்தரவின் படி மிகவும் அவசியமானவையாகக் கருதப்படும் மருந்துவகைகள் வாங்கவும் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யவும், வேறு ஏதாவது மிகவும் அவசியமான அவலுவல்களைக் கவனிப்பதற்காவும் வீட்டை விட்டு வெளியே செல்லலாம் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்று முதல்வர் டக்போர்ட் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மாகாணத்தில் சுகாதார அமைச்சர் உரையாற்றுகையில் மாகாணத்தில் வாழும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய மிக அவசியமான நடைமுறைகளைக் கூறி, அவை எமது உடல் நலத்திற்கு எவ்விதமான கெடுதல்களையும் தராமல் பாதுகாக்கும் என்றும் கூறினார்


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் “ஆம்” என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |



Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# Start with a smile

## Play, wonder and learn in Kindergarten

## Register online for Kindergarten

Peel District School Board is now accepting kindergarten registrations for the 2021-22 school year.




**To learn more and register online, visit www.peelschools.org/kindergarten**

peel District School Board




**நீங்கள் கனடாவுக்கு வந்த நாள் முதல் 5 ஆண்டுகள் வரை புதிய குடிவரவாளர்களுக்கான எமது சலுகைகளில் இருந்து பயன் பெறலாம்**

முதல் 3 ஆண்டுகளுக்கு உங்கள் வங்கிக் கணக்குக்கு நிரந்தர வங்கி கட்டணம் இல்லை

புதிய வாடிக்கையார்களுக்கான எங்களின் சலுகையின் மூலம் **$650** வரை சேமியுங்கள்*

தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசர்கள் உரையாடுவார்கள் அல்லது புதிய வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்

உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்

**nbc.ca**/tamil

*Our banking offer for newcomers is available to immigrants who have been living in Canada for less than 5 years. Savings of $650 over three years based on: no flat monthly fee for our banking package for three years ($14.95/month), first order of cheques free ($56.98/order) and small safety deposit box rent-free for the first year ($55.00/year).To enjoy the full savings, you must sign up for specific additional products and services, keep them and carry out all required transactions for a minimum of 36 months. Some conditions apply.

# நினைவுச் சின்னமும் நினைவைத் தலைமுறைகள் தோறும் கடத்துவதும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் சின்னம் உடைக்கப்பட்டமை நன்மையான விளைவுகளைத்தான் ஏற்படுத்தியிருக்கிறது. முதலாவது நன்மை தூங்கிக் கிடந்த பல்கலைக்கழகத்தை அது துடித்தெழ வைத்திருக்கிறது. யாழ் பல்கலைக்கழகம் கடந்த பத்தாண்டுகளில் பல போராட்டங்களை முன்னெடுத்து
திருக்கிறது. எனினும் பெரும்பாலான அரசியல் போராட்டங்களில் அது எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. அல்லது இடைக்கால வாக்குறுதிகள் மூலம் போராட்டங்கள் பிசுபிசுத்துப் போயின. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் இது ஒரு வெற்றி பெற்ற போராட்டம். ஏனெனில் மாணவர்களின் கோரிக்கைகளுக்கு நிர்வாகம் பணிந்திருக்கிறது. இது முதலாவது நன்மை. அதாவது நினைவுச் சின்னம் உடைக்கப்பட்டது பல்கலைக்கழக மாணவர்களையும் தமிழ் மக்களையும் துடித்தெழ வைத்திருக்கிறது.

இரண்டாவது நன்மை - தமிழ் முஸ்லிம் சமூகங்களை இணைத்திருக்கிறது. இந்த விடயத்தில் வடக்கு-கிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் முஸ்லிம் சமூகங்கள் இணைந்து போராடியமை ஒரு முக்கியமான முன்னேற்றம்.

மூன்றாவது நன்மை - யாழ். பல்கலைக்கழகத்தை நோக்கி முழு உலகத்தின் கவனத்தையும் அது திருப்பியிருக்கிறது. அதிலும் குறிப்பாக ஜெனிவா கூட்டத்தொடரை நோக்கிச்செல்லும் இந்நாட்களில் இவ்வாறான கவனக்குவிப்பும் நொதிப்பும் முக்கியமானவை. இது மூன்றாவது நன்மை.

இதைவிட மேலும் ஒரு நன்மை உண்டு. அது என்னவெனில் உடைக்கப்பட்ட சின்னம் கலைச் சிறப்புடையது அல்ல. அது கலைநயம் அற்றது. அவசர கோலத்தில் உருவாக்கப்பட்டது. உலகில் உள்ள இதுபோன்ற சின்னங்களோடு ஒப்பிடுகையில் நவீனத்துவமற்றது. அது தமிழ் மக்களின் கலைச் சிறப்பை வெளிக்காட்டவில்லை. பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்தவில்லை. அந்தச் சின்னம் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் முற்றவெளியில் கட்டப்பட்டிருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை சின்னமும் நவீனமானது அல்ல. முள்ளுக் கம்பி வேலிக்கு நிறுத்தப்படும் சிமெந்துத் தூண்களை வட்டமாக வைத்து கட்டியது போன்ற ஒரு சின்னம். அதுவும் கலைத்திறன் அற்றது. நவீனமற்றது. அப்படித்தான் முள்ளிவாய்க்காலில் நிறுவப்பட்டிருக்கும் நினைவுச்சின்னமும். தமிழ்மக்கள் இனப்படுகொலையின் கூட்டுக் காயங்களையும் கூட்டு மனவடுக்களையும் கூட்டு அவமானத்தையும் கூட்டுத் தோல்வியையும் கலைச்செழிப்போடு வெளிப்படுத்துவதில் உலகம் வியக்கும் வெற்றிகளைப் பெறவில்லை என்பதனை இந்தச் சின்னங்கள் காட்டுகின்றன. இதில் யாழ் பல்கலைக் கழகத்தின் பொங்குதமிழ் நினைவுச் சின்னம் ஒப்பீட்டளவில் கலைத்திறனுடையது.


எனவே இனிமேலாவது புதிய சின்னங்களை உருவாக்கும் பொழுது உலகத் தரத்தையும் பண்பாட்டு செழிப்பையும் ஒருங்கிணைக்கும் விதத்தில் படைப்புத் திறனோடு சிந்திக்க வேண்டும். இதுவிடயத்தில் துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களிடம் ஆலோசனை கேட்கலாம்.நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கக்கூடிய நவீன சிற்பிகளை அணுகலாம். இப்படிப் பார்த்தால் ஒரு புதிய சின்னத்தை உருவாக்கும் பொழுது அது நவீனமானதாகவும் கலைநயம் மிக்கதாகவும் இருப்பது அவசியம். யாழ் பல்கலைக் கழகத்தில் நுண்கலைத் துறை உண்டு. சித்திரமும் வடிவமைப்பும் துறை உண்டு. இத்துறைசார் நிபுணத்துவத்தை ஏன் மாணவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடாது? தமிழ் அரசியலில் அறிவும் செயலும் பொருத்தமான விதங்களில் ஒன்று மற்றதை இட்டு நிரப்பவில்லை. நினைவுச் சின்னங்களின் விடயத்திலும் அதுதான் நிலைமையா? ஆனால் இது விடயத்தில் மாணவர்கள் வேறு விதமாக சிந்திப்பதாகத் தெரிகிறது. இடிக்கப்பட்ட சின்னத்தை அப்படியே மீளக்கட்ட வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். நிர்வாகத்துக்கு எதிரான தமது போராட்டத்தின் வெற்றியை அது காட்டும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். எனினும் இது தொடர்பில் பழைய சின்னத்தையும் உள்வாங்கி ஒரு புதிய சின்னத்தை எப்படி உருவாக்கலாம் என்று துறைசார் ஞானமுடையவர்கள் சிந்திக்க வேண்டும். இப்படிப் பார்த்தால் ஒரு புதிய நவீனமான நினைவுச் சின்னத்தை குறித்து சிந்திக்க வேண்டிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியமை என்பது ஒரு நாலாவது நன்மை எனலாம்.
எனவே தொகுத்துப்பார்த்தால் யாழ் பல்கலைக்கழகத்தின் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் உடைக்கப்பட்டமை என்பது நன்மையான விளைவுகளைத்தான் தமிழ்அரசியலில் ஏற்படுத்தியிருக்கிறது.

சின்னங்களும் சிலைகளும் உடைக்கப்படுவது தமிழ் அரசியலில் புதியதல்ல. கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக தமிழ்மக்கள் நிறுவிய சின்னங்களையும் சிலைகளையும் தொடர்ச்சியாக வந்த இலங்கை அரசாங்கங்கள் உடைத்திருக்கின்றன. தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவுச்சின்னம் இதுவரை மூன்று தடவைகள் உடைக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே தியாகி சிவகுமாரன் சிலையும் உடைக்கப்பட்டது. இவை மட்டுமல்ல யாழ் நகரப்பகுதி தாக்கப்படும் பொழுது அங்கே நிறுவப்பட்டிருந்த வள்ளுவர் அவ்வையார் சிலைகளும் கூட உடைக்கப்பட்டிருக்கின்றன.

எனவே சிலைகளை நினைவுச் சின்னங்களை உடைப்பது என்பது இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றில் ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாக காணப்படுகிறது. அதேசமயம் உடைக்கப்பட்ட சின்னங்களையும் சிலைகளையும் மீளக் கட்டியெழுப்புவது என்பது அதற்கெதிரான தமிழ் மக்களின் போராட்டத்தின் ஒரு பகுதியாகவும் காணப்படுகிறது. சின்னங்களையும் சிலைகளையும் இடித்தழிப்பதன் மூலம் அவர்கள் நினைவுகளை அழிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் அவர்கள் எதை அழிக்க நினைக்கிறார்களோ அது அழிக்கப்பட முடியாத ஒன்றாக விசுவரூபம் எடுக்கிறது. என்பதற்கு முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் ஒரு சமீபத்திய உதாரணம் ஆகும்.

உடைக்கப்பட்ட சின்னம் கலைச் செழிப்புடையது இல்லைத்தான். ஆனால் அது இப்பொழுது உலகப் பிரபல்யம் அடைந்து விட்டது என்று ஒரு கத்தோலிக்க மதகுரு சொன்னார். அந்த சின்னத்தின் கலைநயம் இன்மைக்கும் அப்பால் அதற்கு இப்பொழுது ஓர் உலகக் கவர்ச்சி கிடைத்துவிட்டது. எதை அவர்கள் தமிழ் மக்களின் நினைவில் இருந்து அழிக்க முற்பட்டார்களோ அது முன்னரை விட ஆழமாக பரவலாக மேலெழுந்துவிட்டது என்றும் மேற்சொன்ன மதகுரு சொன்னார். கலை இலக்கியச் செயற்பாட்டாளரும் புலமைமையாளருமான எனது நண்பர் ஒருவர் சொன்னார் இது போன்ற சின்னங்களை உடைப்பதன்மூலம் தமிழ் மக்களின் நினைவுகளை அழித்துவிட முடியாது. ஏனென்றால் முள்ளிவாய்க்கால் நினைவு என்பதனை தமிழ் மக்கள் சின்னங்களை கடந்து கஞ்சிவரை கொண்டு போய் விட்டார்கள். முள்ளிவாய்க்கால் கஞ்சி எனப்படுவது அழிக்கபட முடியாத ஒரு நினைவுகூர்தல் நடைமுறை என்று.தமிழ் மக்கள் தமது வீட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிக் குடிப்பதை யாராலும் தடுக்க முடியாது. உணவையே ஒரு நினைவாக பயன்படுத்துவது. மேற்சொன்ன கத்தோலிக்க மதகுருவின் வார்த்தைகளில் சொன்னால் "உணவை ஒரு ஆயுதமாக பயன்படுத்திய ஒரு போரில் உணவையே ஒரு நினைவுப் பொருளாக பயன்படுத்துவது" எனவே முள்ளிவாய்க்கால் கஞ்சி வரையிலும் போன ஒரு மக்கள் கூட்டத்தின் நினைவுகளை அழிப்பது கடினம் என்று எனது நண்பர் சொன்னார். உண்மைதான்.

இந்த இடத்தில் வேறு ஒரு உதாரணத்தை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். யாழ் நூலகத்தை எரித்ததும் ஒரு இனப்படுகொலைச் செயல்தான். அது ஒரு பண்பாட்டு இனப்படுகொலை.ஆனால் நூலகம் எரிக்கப்பட்டதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களில் அடிப்படையில் தமிழ் மக்கள் அழிக்கப்பட முடியாத ஒரு நூலகத்தை எண்ணிம வடிவத்தில் கட்டியெழுப்பி விட்டார்கள். அதுதான் நூலகம். கொம். அந்த இணையத்தளத்தில் தமிழ் நூல்கள் எண்ணிம வடிவத்தில் ஆவணங்களாகச் சேகரிக்கப்பட்டுவருகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை கடந்த வாரமளவில் தொண்ணூற்றி எழாயிரத்தை எட்டி விட்டதாக நூலகம் இணையத்தளத்தின் நிறுவுனர்களில் ஒருவர் கூறினார். இந்த எண்ணிக்கை யாழ் நூலகம் எரிக்கப்படும் பொழுது அங்கிருந்த மொத்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்களின் எண்ணிக்கை என்றும் அவர் கூறினார். ஆனால் நூலகம் டொட் கொம் இல் இருப்பவை முழுக்க முழுக்க ஈழத்தமிழ் நூல்ககளே. தீயினால் அழிக்கப்பட முடியாத ஒரு



நூலகத்தை தமிழ் மக்கள் இப்பொழுது பெற்றிருக்கிறார்கள். இதைப்போலவே சிலைகளை உடைக்கும் ஓர் அரசியல் பாரம்பரியத்தில் அழிக்கப்பட முடியாத உடைக்கப்பட முடியாத நினைவுகூரும் முறைமைகளை தமிழ் மக்கள் கண்டுபிடிக்கவேண்டும். ஒருபுறம் உடைக்கப்பட்ட சின்னங்களுக்கு சிலைகளுக்கும் பதிலாக புதிய சின்னங்களை நிறுவும் போராட்டத்தை முன்னெடுக்கும் அதேசமயம் இன்னொருபுறம் நினைவுகளை எப்படி அழிக்கப்படமுடியாத விதத்தில் பேணலாம் தலைமுறைகள் தோறும் கடத்தலாம் என்றும் தமிழ்த் தரப்பு சிந்திக்க வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் உடைக்கப்பட்ட பின்னணியில் வைத்து இது குறித்து மேலும் ஆழமாக சிந்திக்க வேண்டும். அவர்கள் அளிக்கக்கூடிய சின்னங்களை விடவும் அழிக்க முடியாத சின்னங்களை உருவாக்குவதில் தான் தமிழ் மக்களின் நினைவு கூறும் பொறிமுறை மேலும் பலமானதாக மாறும் என்று மேற்சொன்ன எனது நண்பர் சுட்டிக்காட்டினார். போர்த்துக்கீசியர்கள் ஒல்லாந்தர்கள் நாட்டை ஆக்கிரமித்த காலங்களில் சுதேசிகள் தமது மத நம்பிக்கைகளை எப்படி வீடுகளுக்குள் ரகசியமாகப் பேணினார்கள் என்பதனையும் அவர் சுட்டிக்காட்டினார். உண்மை. நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்துவது என்பதும் அதுதான்.

யாழ்ப்பாணத்தில் விரதம் இருப்பவர்கள் விரதம் முடித்து உணவருந்திய வாழை இலையை வேலிகளில் வீட்டுக் கூரைகளில் சுருட்டி வைக்கும் ஒரு வழமை முன்பு இருந்தது. கல்வீடுகளும் ஓட்டுக் கூரைகளும் வருவதற்குமுன் ஓலைக் கூரைகள் காணப்பட்ட காலகட்டங்களில் அது பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இது அன்னியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலகட்டங்களில் தமது மத அனுஷ்டானங்களை ரகசியமாகக் கடைப்பிடித்த மக்கள் பின்பற்றிய ஒரு நடைமுறை ஆகும். வாழை இலைகளை வெளியில் ஏறிந்தால் கைது செய்யப்படலாம் அல்லது தண்டிக்கப்படலாம் என்ற பயம் காரணமாக உணவருந்திய இலைகளை சுருட்டி வேலிகளுக்குள் அல்லது கூரைகளுக்கு மறைத்து வைத்தார்கள். அன்னியர்களின் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்த பின்னரும் அது ஒரு சடங்காக பேணப்பட்டது என்பதே பின்வந்த நடைமுறையாகும்.

எனவே அழிக்கப்பட முடியாத அல்லது தடுக்கப்பட முடியாத நினைவு கூர்தல் என்பது அது எவ்வளவுக்கு எவ்வளவு மக்கள் பயப்படுகிறது எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு பண்பாடாகப் பயிலப்படுகிறது என்பதில்தான் தங்கியிருக்கிறது. அதன்மூலம் நினைவுகளை தலைமுறைகள் தோறும் கடத்தப்படும். ஒரு தேசத்தை நினைவுகளால் கோர்த்து கட்டுவதற்கு அது உதவும். ஏனெனில் இனப்படுகொலையின் நினைவுகளை அழிப்பது என்பதும் இனப்படுகொலையின் ஒரு பகுதிதான். எனவே இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவது என்பதும் அந்த நினைவுகள் எவ்வளவுக்கு எவ்வளவு பேணப்படுகின்றன மக்கள் மயப்படுத்தப்படுகின்றன தலைமுறைகள் தோறும் கடத்தப்படுகின்றன என்பதிலேயே தங்கியிருக்கிறது.

# சனாதிபதி கோட்டாபய இராசபக்ச வீட்டுக் கோழி முட்டை அம்மிக் கல்லை மட்டும் அல்ல மலையையே உடைக்கும்!

*(8ம் பக்கத் தொடர்ச்சி)*

இதனால், ஹரின் பெர்னாண்டோவின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு மனிதத்துவத்தின் பேரில் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்" என கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அண்மையில் நடைபெற்ற பேச்சு சுதந்திரத்தைப் பாதுகாக்க வலியுறுத்தி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே சஜித் பிரேமதாச இவ்வாறு கூறியுள்ளார். இலங்கையில் போர்க் குற்றச்சாட்டுச்சாட்டுகள் இடம்பெற்றதாக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை எண்பிக்க சனாதிபதியே வலுவான ஆதாரங்களை முன்வைத்துள்ளதாகப் பௌத்த அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.


"நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினரை இலக்கு வைத்து, சனாதிபதி வெயியிட்ட அச்சுறுத்தலான கருத்தானது, இலங்கை ஆயுதப்படைகள் மற்றும் தளபதிகள் இழைத்ததாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்களை எண்பிக்கக் கூடிய சாட்சியாக அமைந்துள்ளது'' என ஹெல பொது சவிய அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, சனாதிபதியின் முழுப்பெயரைச் சுட்டிக்காட்டி வெளியிட்ட கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வில் கோபமாக கருத்து வெளியிட்ட சனாதிபதி, விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன், தான் பாதுகாப்பு செயலாளராக இருந்த காலத்தில் பித்திகல சந்தியில் தன் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தியதாகவும் எனினும் பணிகளை ஆரம்பித்த காலத்தில் பதிலளித்த விதத்தில் செயற்படும் திறன் இன்னும் தன்னிடம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

"எனினும் நான் இறுதியில் பிரபாகரனை கொன்று இழுத்து வந்தேன். அந்த நிலைக்கு (மற்றவர்களையும்) கொண்டு வர முடியும். எதற்கும் தயாராக இருக்கும் ஒரு கதாபாத்திரம் நான். அரசியல்வாதிகளுக்காக தன்னால் இவ்வாறு செயற்பட முடியுமென்ற கோட்டாபய இராசபக்சவின் கருத்ததானது, நாட்டின் சனாதிபதி 'இல்லாத பிரச்சினைகளை வரவழைப்பது' போன்றது என ஹெல பொது சவிய அமைப்பின் தலைவர் புதுகல ஜினவன்ச தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோட்டாபய இராசபக்ச பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த (2012) போது கோட்டாபய பற்றி த சண்டே லீடர் ஆசிரியர் பிரடெரிக்கா ஜான்ஸ் கடுமையாக விமர்ச்சித்துக் கட்டுரைகள் எழுதினார். அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கோட்டாபய இராசபக்ச உச்ச கோபத்தில் அவரை ஒரு பெண் என்றும் பார்க்காமல் தகாத வார்த்தைகளால் கடுமையாக கண்டித்துப் பேசினார். அவர் கொல்லப்படுவார் என்று ஒரு அரசாங்க அதிகாரி கூறினார். அரசாங்கத்தை விமர்சிக்கும் கட்டுரைகளை வெளியிடுவதை நிறுத்த மறுத்ததால் பிரடெரிகா ஜான்ஸ் ஆசிரியர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். பணிநீக்கம் செய்யப்பட்ட பின்னரும், தன்னை மர்மநபர்கள் பின்தொடர்ந்ததாகவும், அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்புகள் வந்தன என்றும் ஜான்ஸ் கூறினார். கடைசியில் நாட்டை விட்டே அவர் ஓடித் தப்பினார்.

பாதுகாப்பின் அமைச்சின் செயலாளராக இருந்த போது தன்னைப் பற்றிய விமரிசனங்களை விரும்பாது ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொண்டவர் இப்போது சர்வ வல்லமை படைத்த சனாதிபதியாக இருக்கும்போது யாராவது அவரைத் தட்டிக் கேட்க முடியுமா? அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மிக் கல்லை உடைக்குமாம். சனாதிபதி கோட்டாபய இராசபக்ச வீட்டுக் கோழி முட்டை அம்மிக் கல்லை மட்டும் அல்ல மலையையே உடைக்கும்! அவரை விமர்ச்சிப்பவர்கள் இந்தப் பழமொழியை நினைவில் வைத்திருப்பது நல்லது!


பண்பாடு · மொழி · வரலாறு
ஒன்ராரியோ மாணவர்களை நாம் ஆயத்தப்படுத்துகின்றோம்
அவர்கள் உலகின் பிரஜைகளாக வருவதற்குரிய பாதையில்.
தூர இருந்து கற்றல்-வீட்டிலிருந்து கற்றல் ஆகியவை இணையவழியாக கல்விச்சபை ஊடாக வழங்கப்படுகின்றது. 2.5 மணித்தியாலங்களை, ஒரு வாரத்தில், நேரடியாக முகம் பார்த்தும் சுதந்திரமாகவும் பயிலும் சந்தர்ப்பம்
Tamil
தமிழ்
TORONTO EDUCATION WORKERS
தூர இருந்து கற்கும் திட்டத்திற்காக இன்றே பதிவு செய்யுங்கள்
OntarioOnlineLearning.ca


Happy Thai Pongal & Tamil Heritage month
தைப் பொங்கல் மற்றும்
தமிழ் மரபுத் திங்கள் வாழ்த்துக்கள்
Hon. Mary Ng, MP
Markham-Thornhill
16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-8100 | Mary.Ng@parl.gc.ca
maryng.libparl.ca | @maryngMarkhamThornhill
@Mary_Ng | @Mary_Ng

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்

ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

Ontario




# கைது செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளரை உடனே விடுவிக்க ஆர்.எஸ்.எஷப் வலியுறுத்தல்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 48 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்று எல்லையில்லா ஊடகவியலாளர்கள் அமைப்பு கோரியுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த முருகுபிள்ளை கோகுலதாசன் ஒடுக்குமுறையான அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளது "மிகத் தெளிவாக ஊடகச் சுதந்திரத்தை முடக்கும் செயலாகும்" என்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அதன் ஆசிய-பசிபிக் பகுதிக்கான தலைவர் டானியல் பஸ்டார்ட் கூறியுள்ளார்.

ஃபேஸ் புக் பதிவு ஒன்றில் விடுதலைப் புலிகளின் படங்களை பதிவு செய்ததாகக் கூறி கோகுலதாசன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். ஆனால் உள்நாட்டுப் போரின் போது கொல்லப்பட்டவர்கள் தொடர்பான நிகழ்வுகளின் படங்களையே பதிவு செய்தார் என்று கூறப்படுகிறது.

"நிபந்தனையின்றி உடனடியாக அவர் விடுவிக்கப்பட வேண்டுமென்று இலங்கையின் சட்டமா அதிபரை வலியுறுத்துகிறோம்".

தமிழர்களின் பிரச்சனைகளுக்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ குரல் கொடுக்கும் அனைத்து ஊடகவியலாளர்களையும் துன்புறுத்துவதை பாதுகாப்பு படையினர் அவசியம் நிறுத்த வேண்டுமென்று ஆர்.எஸ்.எஃப் அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளரின் நிலையை வெளிப்படுத்தி இலங்கையில் ஊடக சுதந்திரத்திற்கான அமைப்பு ஜே.டி.எஸ் டிவீட் செய்துள்ளது. கோகுலதாசன் முகவும் இரகசியமான முறையில் கடந்த நவம்பர் 28ஆம் திகதி மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டார் என்று அந்த அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவீரர் தினத்துக்கு அடுத்த நாள் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


ஓராண்டுக்கு முன்னர் இலங்கையின் கிழக்கைச் சேர்ந்த ஏழு ஊடகவியலாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடப்பட்டிருந்தது. வெளிநாட்டிலுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து பணம் பெற்றார்கள் என்று குற்றஞ்சாட்டி அந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. அப்போது வெளியான துண்டுப் பிரசுரங்களில் இவர்கள் ஏழு பேரின் புகைப்படங்களை வெளியிட்டு அவர்கள் வட்டமிட்டு அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

ஆனால் இது குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்யவோ அல்லது அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவோ உள்ளூர் பொலிசார் மறுத்துவிட்டனர். உலகளவில் ஊடக சுதந்திரம் குறித்த 180 நாடுகளின் பட்டியலில் இலங்கை 127ஆவது இடத்திலுள்ளது குறிப்பிடத்தக்கது.



# இழிவான செயலை ஒன்றை செய்துவிட்டு அதற்கு மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூற முடியாது

## நினைவுதூபி இடித்தழிப்புக் குறித்து விக்கி காட்டம்



தமிழ் மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக அவர்களுடைய அன்புக்குறிய உறவுகளை நினைவு கூறுவதற்காக யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டது தான் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி.

“இராணுவப் பாதுகாப்புடன் இதனை நிர்மூலமாக்குவது தமிழ் மக்களின்.உணர்வுகளை நசுக்குவதற்கு ஒப்பானது. அதேவேளை. இந்த நினைவுத்தூபி இடிப்பு விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் நடந்து கொண்ட முறைமை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு இழிவான செயலை செய்துவிட்டு அதனை மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூற முடியாது. இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான ‘சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தற்போது உருவாகியிருக்கும் நிலைமைகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது: இப்போது இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள். பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் அவர்களின் உறவுகளுக்காக அமைக்கப்பட்டது. மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் என அனைத்துத்தரப்பினரும், இணைந்தே இதனை அமைத்தார்கள். இதனை நிர்மூலமாக்க வேண்டும் என்ற அரசின் உயர் தரப்பினரின் அழுத்தங்களையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம், இராணுவப் பாதுகாப்புடன் இதனை அகற்றியிருக்கின்றது.

கடந்த காலங்களில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், அவர்கள் மீதான படுகொலைகள் போன்றவற்றின் நினைவுகளை முழுமையாக அகற்றிவிட வேண்டும் என்பது தற்போதைய அரசின் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. அதன் ஓர் அங்கமாகத் தான் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

அரசு முன்னெடுக்கும் மிகவும் ஆபத்தான வேலைத்திட்டங்களில் இதுவும். ஒன்று. இது போன்ற பல திட்டங்கள் இந்த அரசிடம் இருக்கின்றன எனத் தெரிகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள். விரிவுரையாளர்கள் தமது உணர்வுகளின் வெளிப்பாடாக தமது அன்புக்குரிய உறவிற்காக அமைத்த நினைவுத் தூபியை ஒரே இரவில் அராஜகமாகத் தகர்த்தெறிவது என்பது தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டி நசுக்குவதற்கு ஒப்பானது. ‘இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் ஒருபோதும் நல்லெண்ணத்தை ஏற்படுத்திவிட முடியாது. இது இராணுவ ஒடுக்குமுறையின் கோரத்தின் வெளிப்பாடாகத்தான் இருக்கின்றது. அத்துடன் எம்மவரின் பயத்தின் உச்சகட்டமாகவும் காணப்படுகின்றது.

பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியில் இராணுவம். அதிரப்படையிரைக் குவித்து துப்பாக்கி முனையில் மாணவர்களையும். பொதுமக்களையும் அச்சுறுத்திப் பணியவைப்பதானது இராணுவ அடக்குமுறையின் அசிங்க முகத்தையே வெளிப்படுத்துகின்றது. இந்தப் பகுதியில் இராணுவத்தைக் குவிக்க வேண்டிய அவசியம் எதுவும் ‘இல்லை. உடனடியாக இராணுவம் அங்கிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும்.

‘இப்போது இங்கு நடப்பது வெகுவிரைவில் சிங்களப் பகுதிகளிலும் ஏதோ ஒரு விதத்தில் நடைபெறப் போகின்றது என்பதை எமது சிங்கள சகோதர,சகோதரிகள்உணர்வார்களாக அதேவேளை, இந்த நினைவுத் தூபி இடிப்பு விடயத்தில் பல்கலைக் கழக நிர்வாகம் நடந்து கொண்ட முறைமை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு இழிவான செயலை செய்துவிட்டு அதனை மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூறமுடியாது. ஒரு தவறான காரியத்தை செய்யுமாறு மேலிடுத்து உத்தரவு வருமானால், அதனை செய்வதில் உள்ள பிழை அல்லது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியவற்றை மேலிடத்துக்கு எடுத்துக் கூறி புரிய வைப்பது சம்பந்தப்பட்டவர்களின் கடமை. இது இந்த விடயத்தில் எந்தளவுக்கு நடைபெற்றிருக்கிறது என்பது எனக்கு தெரியாது.

எது எப்படி இருந்தாலும், இதுவரை காலமும் இந்த நினைவுத் தூபியை அகற்றுவதற்கு பல்கலைக்கழகத்தின் முன்னைய இரண்டு நிர்வாகங்களும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்றுள்ளது.

# யாழ். பல்கலை வளாக தமிழர் நினைவுத்தூணை அழித்த இலங்கை அரசை கண்டிக்கின்றார் கனடா விஜேய் தணிகாசலம். எம்பிபி



சிறிலங்கா அரசினால் 2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டிருந்த முள்ளி வாய்க்கால் தமிழின அழிப்பு நினைவுத் தூபி சிறிலங்கா அரச படைகளாலும் அதன் அதிகாரிகளாலும் தகர்த்தழிக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவுத் தூபியானது, பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் போது கொல்லப்பட்ட தமது அன்புக்குரியவர்களை நினைவுகூரும் இடமாக விளங்கியது. தமிழின அழிப்பு நினைவுச் சின்னத்தினை அழிப்பதென்பது முள்ளிவாய்க்காலில் சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நினைவுச் சுவடுகளை இல்லாதொழிப்பதுடன், சிறிலங்கா அரசின் அனைத்துத் தவறுகளையும் மூடிமறைப்பதற்கான நடவடிக்கையாகும்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த வர்த்தகரும் ஸ்காபரோ றூஜ் பார்க் வாசியுமான கார்த்திக் நந்தகுமார் அவர்கள், நடைபெற்றுள்ள இன்றைய நிகழ்வு தனக்கு யாழ்ப்பாண நூலக எரிப்பு சம்பவத்தினை நினைவுபடுத்தியதெனத் தெரிவித்துடன், அரிய பல நூல்களையும் தமிழரின் வரலாற்றுச் சான்றுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கிய யாழ்ப்பாணப் பொது நூலகம் 1981ஆம் ஆண்டு மே 31ஆம் திகதியன்று சிறிலங்கா அரசினால் தீயிட்டு அழிக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.


நினைவுச் சின்னங்கள், சிலைகள், தூபிகள் போன்றவை இறந்தவர்களை நினைவுகூரும் விதத்தில் மக்களால் நிறுவப்படுள்ளவை. இவற்றினை அழித்தி செயலானது இறந்தவர்களை நினைவுகூர விடாது தடுத்திருப்பதுடன், தமிழ் மக்களுக்கு மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளித்திருக்கிறது.

நடைபெற்றவைகளின் நினைவுகளைச் சிதைப்பது, தவறுகளை மூடிமறைப்பது, சாட்சிகளை அழிப்பது போன்றவை இன அழிப்பின் இறுதிக் கட்டமாகக் கருதப்படுபவை. மிர்கோ கேர்மிக் என்பவரால் குறிப்பிடுவது போல், வல்லாதிக்கங்கள் தமது வரலாற்றின் இருண்ட பக்கங்களை அகற்றி தமக்கு வேண்டியவாறு வரலாற்றினை மாற்றி எழுதுகின்றன. இவற்றுக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் நடைபெற்றவற்றை எடுத்துரைக்கும் நினைவுச் சின்னங்கள், நினைவு நிகழ்வுகள் அழிக்கப்படுகின்றன அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றன. இதன் அடிப்படையில்தான் சிறிலங்கா அரசினால் நடத்தப்பட்ட அட்டூழியங்களின் சான்றாக விளங்கிய இந்த நினைவுச் சின்னமும் அழித்தொழிக்கப்பட்டுள்ளது.

ஸ்காபரோ றூஜ் பார்க்கில் வசிக்கும் இன்னொருவரான சுகாதாரத் துறையில் பணிபுரியும் திவ்வியா சாந்தக்குமார் கருத்துத் தெரிவிக்கும்போது, சிறிலங்கா அரசாங்கம் தமிழர்களின் வடகிழக்கு பகுதிகளை படையினரின் ஆதிக்கத்தினுள் தொடர்ந்தும் வைத்திருப்பதுடன் தமிழர்கள் கொல்லப்பட்ட தமது அன்புக்குரியவர்களை நினைவு கூருவதற்கும், அவர்களின் நினைவுச் சின்னங்களைப் பேணுவதற்கும் தடைபோட்டு வருகின்றது என்றார்.

சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் தமிழர்கள் மீதான தனது இன அழிப்பை மறுத்து வருகின்றது. இச்செயலானது தமிழர்கள் தமக்கு நடைபெற்ற அழிவின் நினைவுகளிலிருந்து மீண்டு தமக்கான புதியதொரு வாழ்க்கையை தொடங்க விடாது தடுக்கின்றது. எனவேதான், 104வது சட்டமூலம் மிக மிக அவசியமானதாகும். இந்தச் சட்டமூலம் ஒன்ராறியோவில் உள்ள தமிழ் மக்களுக்கு இன அழிப்பினால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்பினைக் குறைக்க உதவும். இந்நேரத்தில், எமது கனடிய அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன். **விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர் ஸ்காபரோ றூஜ் பார்க்**

## முள்ளி வாய்க்கால் நினைவுதூபி தரைமட்டம் : சிங்கள காடையர் கூட்டம் இனவெறி ஆட்டம் ; மலேசிய திராவிட இயக்க மூத்த தலைவர் காட்டம்



ஈழத் தமிழ் மக்களின் சம உரிமைக்காக ஜனநாயக முறையில் போராடிய தந்தை செல்வாவும் இராணுவ ரிதியில் களம் கண்ட வேலுப்பிள்ளை பிரபாகரனும் சிங்கள இனவெறிப் போக்காளர்கள் ஒருகாலும் மாற மாட்டார்கள் என்று சொன்னதை, அந்தக் காடையர்கள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர் என்று மலேசிய திராவிட இயக்கத்தின் மூத்தத் தலைவர் இரெ. சு. முத்தையா கண்டனம் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் போரினாலும் முறைதவறிய இராணுவ நடவடிக்கையாளும் இலட்சக் கணக்கான தமிழர்கள் ஈழ மண்ணில் தங்களின் இன்னுயிரைத் துறந்ததன் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி, கடந்த 8ம் நாள் வெள்ளிக்கிழமை இரவோடு இரவாக, கமுக்கமாக உடைக்கப்பட்டது அடாத செயல் ஆகும்.

இத்தகைய கொடுஞ்செயல் மிகவும் கண்டனத்திற்கு உரியது என்று இரெ. சு. முத்தையா வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துகள் !
May This Thai Pongal
Bring You and Your Loved Ones
Good Health and Blessings.
Happy Thai Pongal!
Member of Parliament | Scarborough North
SHAUN CHEN
4386 Sheppard Avenue East, Unit C
Scarborough, Ontario M1S 1T8
416-321-CHEN (2436)
info@shaunchen.com
ShaunChenMP
@shaunchenmp
@Shaun_Chen
www.shaunchen.com




Dream Design Build
Paramount
Custom Homes Ltd.
416-268-5296
www.paramountcustomhomesltd.net
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION
Incredible Quality
Quick Turnaround
Competitive Prices
140-100 Cowdray Court, Scarborough, ON M1S 5C8
Paramountcustomhomesltd@gmail.com

105-8130 Sheppard Ave E,
Scarborough, ON M1B 3W3
(416) 283-8448
vijay.thanigasalam@pc.ola.org

VIJAY THANIGASALAM

MPP for Scarborough-Rouge Park





உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் எங்கள் இனிய தைப் பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்!

Happy Thai Pongal & Tamil New Year!

நீங்கள் பொங்கல் விழாவைக் கொண்டாடும் பொழுது ஒன்ராறியோ மாகாணத்தின் சுகாதார வழிகாட்டல் விதிமுறகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Sunshine Florist
Creative Solutions For All Your Floral Needs.

Vaughan நகரில் வாழும் தமிழ் மக்களுக்காக புதியதோர் பூக்கடை



சண்சைன் பூக்கடை



2021, ஜனவரி மாதம் 19ம் திகதி
செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு
திறந்து வைக்கப்படும்

- திருப்பு விழாவை முன்னிட்டு விசேட விலைகளில் உங்களுக்கு தேவையான பூக்கள் மற்றும் மாலைகள்
- மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மல்லிகை, கனகாம்பரம் போன்ற பல வகைப் பூக்கள்
- மற்றும் மலர் மாலைகள் ஆகியன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

**We serve:**

Cut Flowers
Fresh Jasmine
Bouquets
Wedding Arrangements
Vase Arrangements
Funeral Flowers
Sympathy Flowers
and more...

905 553 0777
sunshineflorist777@gmail.com
112 - 9441 Jane Street
Vaughan ON,L6A 4H8

# ஈழத்துத் திருக்கோவில்கள் 929



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## கந்தவனம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில்

### பொலிகண்டி, யாழ்ப்பாணம்

'' பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண்டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருக்கிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே. ''

எட்டிகுடி, எண்கண் முதலிய திருக்கோயில்களிலே வைத்துப் பூசிக்கப்படுவதுபோன்ற திருவுருவம், பொலிகண்டி கந்தவனம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோயிலும் வைத்துப் பூசிக்கப்பட்டு வந்தது. அத் திருவுருவம் சில காலத்துக்கு முன்னே, உறுப்பு ஒன்றில் ஊனமடைந்தமையினால், இத் திருக்கோயிலின் உள்வீதியின் வடபுறத்திலே, மல்லிகை மலர்க்கொடி சூழ்ந்த மணிமண்டபத்தில் வைத்து பூசைவழிபாடுகள் நடைபெறும்.

அடியவர்கள் ஊனமடைந்த மூலவரை, பழையவர் எனப் பெயரிட்டு வழிபாடு நடத்துவர். உள்வீதியின் வடபுறத்திலே ஓர் நறுநீர்க்கேணி உள்ளது. முருகப்பெருமானை முழுமனதுடன் எண்ணத்தில் இருத்தி, இக்கேணியில் முழுகி, இப்புனித நீரை அருந்தியவர்கள் தமது உடற்பிணி நீங்கி நலம் பெற்றுள்ளார்கள். இங்கு கற்பூரம் விளைந்தது என்பதற்கமைய, இக்கேணியின் நடுவே ஓர் கற்பாறை அமைந்துள்ளது.

இவ்வாறே, வடக்குவீதியில் இரண்டு வன்னி மரங்கள் காலங் கணிக்க முடியாத பழமையோடு காணப்படுகின்றது. திருக்கோயில் உள்வீதித் தென்புறத்தில் காஞ்சி மா என்று கூறப்படும் அரிய மாமரம் ஒன்று காணப்பட்டது. காலகதியில் இம்மரம் பட்டுப்போயினும் அதன் அடிமரம் காணப்படுகின்றது. அடியவர்கள் காஞ்சிமாவின் அடிமரத்தடியில் கற்பூரங் கொளுத்தி வழிபடுவது வழக்கம். மக்களில்லாது வருந்தி வரங் கிடந்தோர், இக் காஞ்சிமாவின் பழத்தையுண்டு மைந்தரைப் பெற்றனர் என்று பெரியோர் கூறுவர்.

பொலிகண்டி கந்தவனக்கடவையில் முருகன் எழுந்தருளிய வரலாறு, புராணக்கதைகளோடு தொடர்புடைய பழமை நிறைந்ததாகக் காணப்படுகின்றது. நான்முகக் கடவுளின் மைந்தருள் ஒருவராகிய காசிபர் என்பவர், வடமலையிலே தவம் செய்து கொண்டிருந்தார். இவ்வேளையில் சுக்கிராச்சாரியரின் சூழ்ச்சியினால் அவுணர் மன்னன் மகளாகிய மாயை என்பவளைக் கண்டு காமுற்றுக் கலந்து, சூரபன்மன், சிங்கன், தாருகன் ஆகிய மைந்தர் மூவரைப் பெற்றனர்.

இம் மைந்தர்கள் மூவரும் சிவவழிபாட்டில் ஈடுபாடுகொண்டு, சிவனை எண்ணித் தவமிருந்து அரிய வரங்கள் பலவற்றைப் பெற்றனர். இவர்களுள் சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும், நூற்றெட்டு ஊழிக்காலம் ஆளும் பெரும்பேறும், வச்சிர உடலும், மாயமான் தேரும், படைக்கல வலிமையும் பெற்று, பூமியிலே கடல்நடுவில் மகேந்திரபுரி என்னும் கடிநகர் ஒன்றினை அமைத்து, அங்கே துணைவரும், மைந்தரும் ஒன்றுகூடி வாழ, சிறப்போடு அரசாட்சி புரிந்துள்ளான்.

சூரபன்மனின் குலப்பகைவராகிய திருநெடுமால் முதலானோரைபோரில் வென்று அவர்கள் வளங்களைக் கவாந்தான். இந்திரனை பொன்னாடு விட்டுத் துரத்தி சயந்தனைச் சிறைசெய்து, தேவர்களை குற்றேவல் செய்வித்து மிகவும் வருத்தி வந்தான். அசுரர் செய்யும் பெருந் துன்பத்தை ஆற்றமுடியாது வேதனையடைந்த இந்திரன் முதலியோர், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை அடைந்து தமது துன்பத்தை எடுத்துரைத்தனர். தம்மை இத் துன்பத்திலிருந்து மீட்டு அபயம் அளிக்குமாறு வேண்டி நின்றனர்.

அம்மையப்பனாக வீற்றிருந்து உயிர்களுக்குக் கருணை மழைபொழியும் அருட்கடலாகிய சிவபெருமான் தேவர்களை நோக்கி, "அஞ்சேல்" என அருள்புரிந்து தாம் ஓர் குழந்தை வடிவங்கொண்டு அவர்களுக்கு அருள்புரியத் திருவுளங்கொண்டார். அப்பொழுது "அருவமும் உருவமாகி அனாதியாய் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற" அவருடைய அருட்பெருஞ் சோதியிலிருந்து, மூவிரு முகமும், ஆறிருநோக்கமும், பன்னிரு தோளும், கட்டிளமையும், தெய்வமணமும், பேரின்பமும், கடவுள் நலனுங்கொண்டு உலகமெல்லாம் உய்ய, குழந்தையாக முருகப்பெருமான்தோன்றினார்.

குழந்தைப்பெருமானாகிய முருகனை நோக்கி, "குழந்தாய் தேவர்களைக் காப்பது உன் கடன்" என்று அம்மையப்பர் கூற, வீரவாகுதேவர் முதலியோருடன் தானே சேனைத் தலைவராய் சென்று, வழியிலே தாருகனை கிரௌவுஞ்ச மலையோடு அழித்தார். பின் சூரபன்மனுக்குத் தூதுவிட்டும் எவ்வித பயனும் ஏற்படாமல் போகவே, மகேந்திரபுரிக்குச் சென்று, சூரனையும் அவனது படைகளையும் அழித்தார். சூரனுடைய மாய வலிமையை நீக்கி, முருகன் கைவேலாகிய வேற்படையால் சூரபன்மனின் வச்சிர யாக்கையை இருகூறாக்கியபோது, அவை மயிலும் சேவலுமாய் வர, அவற்றை வாகனமாகவும், கொடியாகவுமாக்கி அருள்புரிந்தார்.

வளரும்...


# ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம்

**அனைவருக்கும் எமது தைப் பொங்கல் நல் வாழ்த்துக்கள்.**

**நித்திய பூசைகள் இடம்பெறுகின்றன.**



3021 Markham Rd, Unit 45,46 & 47

Scarborough, Ontario M1X 1L8

Tel.No: (416) 293-1226

*ஆலயத்தில் பிரதி தினமும் செவ்வாய்க்கிழமைகளில் கட்டணமில்லாமல் இலவசமாக எலுமிச்சம் பழ விளக்கேற்றி அம்பாளை கூட்டு வழிபாடு செய்யும் நிகழ்ச்சி கடந்த 17 ஆண்டுகளாக நடைபெறுகிறது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.*

குறிப்பு: ஐயா அவர்களால் சாதகம், பொருத்தம் பார்த்தல், பொதுப்பலன் சொல்லுதல், வியாபார விருத்தி, சாந்தி பரிகாரம் அனைத்தும் ஒழுங்கு செய்யப்படும்.

பிரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்
ஆலய நிர்வாகம்

# 600க்கும் மேற்பட்ட காளைகள் சீறிப் பாய்ந்த அவனியாபுரம் ஜல்லிக்கட்டு: ராகுல் காந்தி, உதயநிதி ஸ்டாலின் கண்டுகளித்தனர்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு விழா தொடங்கியது. அமைச்சர் செல்லூர் கே.ராஜூ கொடியைசைத்து தொடங்கி வைத்தார். ஆட்சியர் அன்பழகன் தலைமையில் மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றனர். முதலில் வாடிவாசலில் கோயில் காளைகள் அவிழ்த்துவிடபட்டன. இதைத் தொடர்ந்து ஜல்லிக்கட்டு காளைகள் களமிறங்கின.

பதிவான காளைகள் எண்ணிக்கை 1261. சுமார் 600க்கும் மேற்பட்ட காளைகள் வாடிவாசலில் அவிழ்த்து விடபட்டன. வீரர்கள், காளைகளின் உரிமையாளர்களுக்கு தங்ககாசு, மிக்சி, பேன், கிரைண்டர், சைக்கிள் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த பாரம்பரிய ஜல்லிக்கட்டு விழாவை காண, திமுக மாநில இளைஞரணி செயலர் உதயநிதி ஸ்டாலின் காலை 11.15 மணிக்கு மேடைக்கு வந்தார்.தனி விமானம் மூலம் மதுரை வந்த ராகுல் காந்தி 12.5 மணிக்கு ஜல்லிக்கட்டு மேடைக்கு வந்தார். இருவரும் அருகருகே அமர்ந்து, வாடிவாசலில் துள்ளி விளையாடிய காளைகள்,மாடிபிடி வீரர்களை கண்டு மகிழ்ந்தனர்.

சிறந்த மாடி பிடி வீரர்களுக்கு ராகுல்,உதயநதி ஸ்டாலின் தங்க மோதிரம், தங்ககாசுகளை வழங்கி உற்சாகப்படுத்தினர், சுமார் 40 நிமிடம் ஜல்லிக்கட்டை பார்த்த ராகுல் மேடையில் பேசியதாவது:தமிழக



பாரம்பரிய இந்த விழா ஏற்பாட்டை பார்க்கும் போது நல்ல அனுபவம் கிடைத்துள்ளது. ஜல்லிகட்டு போட்டியை நேரில் பார்த்து மகிழ்ச்சி அளிக்கிறது. இது போன்ற தமிழர், தமிழர் கலாச்சாரம் தமிழின் சிறப்பு இந்தியாவிற்கு முக்கியம். அதனை கொண்டாட இங்கு வந்திருக்கிறேன். இந்த கலாச்சார விழாவை ஏற்பாடு செய்து நடத்துபவர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்கிறேன்.

தமிழ்மொழியை, தமிழ் கலாச்சாரத்தை பாதுகாத்துவருபவர்களுக்கு எனது நன்றி. தமிழக மக்களோடு நிற்க வேண்டியது எனது கடமை. தமிழர்களின் கலாச்சாரம் உணர்ச்சிகளை நேசிக்கவே அவனியாபுரம் வந்துள்ளேன்.அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகள் மாடுபிடி இளைஞர்களுக்கும் பொங்கல் வாழ்த்துகள் என்றார்.

ராகுல் காந்தியின் ஆங்கில உரையை மாநில தலைவர் கேஎஸ் அழகிரி தமிழில் மொழிபெயர்த்தார். ராகுல் சார்பில், சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு 2 பைக் பரிசளிக்கப்பட்டது. விழா மேடையில் உதயநிதி பேசும்போது, மதுரை என்றால் வீரம். அவனியாபுரத்துக்கு முதன்முறையாக வந்துள்ளேன். இனி ஆண்டு தோறும் வருவேன். அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகள் என்றார். முன்னதாக ராகுல் வருகையையொட்டி மதுரை ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் கருப்புக்கொடி காட்ட முயன்ற பாஜக, இந்து முன்னணியைச் சேர்ந்த 10க்கும்மேற்பட்டவர்கள் கைது செய்யபட்டனர். ஜல்லிக்கட்டு விழாவுக்கு வந்த ராகுல் காந்திக்கு பழங்காநத்தம், தெற்குவாசல் க்ரைம் பிரான்ஞ் ஆகிய இடங்களில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் கார்த்திகேயன் தலைமையில் உறசாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பழங்காநத்தம் ரவுண்டானாவில் காங்கிரஸார் ஏற்பாடு செய்திருந்த நாட்புற கலைநிகழ்ச்சியை ராகுல் கண்டுகளித்தார்.இதன் பின் மதுரை தென்பழஞ்சியில் நடந்த பொங்கல் விழாவிலும் அவர் பங்கேற்றார். மாலை 3 மணிக்கு மேல் தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டுச் சென்றார். ராகுல் வருகையையொட்டி பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. ராகுல் காந்தியுடன் புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி, மாணிக்கம் தாகூர் எம்பி, ராமசாமி எம்எல்ஏ உள்ளிட்டோரும் ஜல்லிக்கட்டு விழாவை பார்த்தனர்.

# தமிழகம் முழுவதும் பொங்கல் பண்டிகை உற்சாக கொண்டாட்டம்



தமிழகம் முழுவதும் இன்று பொங்கல் பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டுவருகிறது. தமிழர்களின் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் விழா நான்கு நாட்கள் உற்சாகமாக நடைபெறும். இந்த ஆண்டின் பொங்கல் விழா நேற்று தொடங்கியது.

பொங்கல் பண்டிகையின் துவக்கமான போகிப் பண்டிகை நேற்று (மார்கழி கடைசி நாள்) கொண்டாடப்பட்டது. பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற சான்றோர் வாக்கின்படி, வீட்டில் இருக்கும் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தி தீயிட்டு கொளுத்தினர். மனதில் உள்ள எதிர்மறை எண்ணங்கள் விலகி, நல்ல எண்ணங்கள் மேலோங்கும் என்ற ஐதீகத்தின் அடிப்படையில் போகி கொண்டாடப்படுகிறது.

தமிழர் திருநாளாம் தை முதல் நாளான இன்று தமிழகம் முழுவதும் பொங்கல் பண்டிகை வெகு உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வுலகில் உயிர்கள் வாழ ஆதாரமாக விளங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, புதுப்பானையில், புத்தரிசிப் பொங்கலிட்டு படையலிட்டு, இப்பண்டிகையை மகிழ்ச்சி பொங்க கொண்டாடி வருகின்றனர்.

பொங்கலையொட்டி வீடுகள் முன் அலங்காரத் தோரணங்களைக் கட்டி, வண்ண நிறங்களில் கோலமிட்ட மக்கள் பொங்கல் பண்டிகையை உற்சாகமாக வரவேற்றனர். புத்தாடை உடுத்தி, மதம், இன பேதமின்றி உறவினர்கள், நண்பர்களுக்கு வாழ்த்துகளை பரிமாறி மகிழ்ந்து வருகின்றனர். இதேபோல் அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில், பல்வேறு கலைநிகழ்ச்சிகள், விளையாட்டு போட்டிகளுடன் பொங்கல் விழாக்கள் நடைபெறுகின்றன. பொது வெளியில் மக்கள் ஒன்றுசேர்ந்து பொங்கல் வைத்து வழிபாடு நடத்தும் இந்த திருவிழாக்கள், சமத்துவத்தை உலகிற்கு உணர்த்துவதாக உள்ளன.

தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதிலும் உள்ள தமிழர்கள், வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் தங்கள் பாரம்பரிய வழக்கம் மாறாமல், வீடுகளில் பொங்கல் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

# சென்னையில் போகியின் போது தேவையற்ற பொருட்களை எரித்ததால் அனைத்து மண்டலங்களிலும் காற்று மாசு அதிகரிப்பு: அம்பத்தூர் மண்டலத்தில் அதிக மாசு

போகி பண்டிகையின்போது தேவையற்ற பொருட்களை எரித்ததால், சென்னையின் அனைத்துமண்டலங்களிலும் அனுமதிக்கப்பட்ட அளவை விட காற்று மாசு அதிகரித்துள்ளது.மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்சார்பில், போகி பண்டிகையின் போது பொதுமக்கள் ரப்பர் பொருட்கள், பழைய டயர்கள், பிளாஸ்டிக் போன்ற அடர் புகையை வெளியிடும் பொருட்களை எரிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும் சென்னையில் நேற்று அதிகாலை போகி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்கள் தங்கள் வீட்டில் இருந்தபழைய பொருட்களை, வெளியில்கொட்டி எரித்தனர்.

பொதுமக்கள்எரித்த பொருட்களால், புதன்கிழமை காலை மாநகரம் முழுவதும் பனி மூட்டம் போல புகை மூட்டம் நிலவியது. இதனால் காலை நேரத்தில் ரயில்கள் மற்றும் வாகனங்கள் முகப்பு விளக்கை எரியவிட்டபடி சென்றன.மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள், சென்னை மாநகராட்சி அதிகாரிகள், காவல் துறையினர் ஆகியோரை கொண்ட 32 குழுக்கள் புதன்கிழமை அதிகாலை ரோந்து பணியில் ஈடுபட்டன.



மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சார்பில், சென்னையில் 15 இடங்களில் காற்றின் தரம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இதில் சென்னையில் அனைத்து மண்டலங்களிலும் காற்று மாசு அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.இது தொடர்பாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது:போகி பண்டிகையை முன்னிட்டு புதன்கிழமை அதிகாலை மேற்கொண்ட ரோந்து பணியின்போது, சில இடங்களில் பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருட்கள் எரிப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அவைதண்ணீர் ஊற்றி அணைக்கப்பட்டன. சிலருக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ம் தேதி காலை 8 மணி முதல் 13ம் தேதி காலை 8 மணி வரை மேற்கொண்ட காற்று தர பரிசோதனையில் கந்தக டை ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு போன்ற வாயுக்கள் அனுமதிக்கப்பட்ட அளவிலேயே (ஒரு கனமீட்டர் காற்றில் 80 மைக்ரோகிராம் இருப்பது அனுமதிக்கப்பட்ட அளவு) இருந்தன.காற்றில் கலந்துள்ள 2.5 மைக்ரான் அளவுள்ள நுண்துகள்கள் ஒரு கனமீட்டர் காற்றில் குறைந்தபட்சமாக 52 மைக்ரோகிராம், அதிகபட்சமாக 102 மைக்ரோகிராமாக இருந்தது.

இதில் அனுமதிக்கப்பட்ட அளவு 60 மைக்ரோ கிராம் ஆகும்.காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவுள்ள நுண்துகள்கள் ஒரு கனமீட்டர் காற்றில்குறைந்தபட்சமாக 103 மைக்ரோகிராம், அதிகபட்சமாக 256 மைக்ரோகிராமாக இருந்தது. இதில் அனுமதிக்கப்பட்ட அளவு 100 மைக்ரோ கிராம் ஆகும்.

காற்றுத் தரக்குறியீட்டை பொருத்தமட்டில், குறைந்தபட்சமாக ராயபுரம் மண்டலத்தில் 113 ஆகவும், அம்பத்தூர் மண்டலத்தில் 241 ஆகவும் பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

## தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

*சிறப்புக் கதிரோட்டம்...*

# முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு அஞ்சலியா?



**யா**ழ்ப்பாண பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட காலம் தொடக்கம் அது உலகத் தமிழர்களின் அடை-யாளச் சின்னமாக விளங்குகின்றது. ஒரு உயர்ந்த சிகரத்தைப் போன்று அதனை நாம் கற்பனை செய்து பார்த்தால் அந்த சிகரத்தின் உச்சியில் நின்று உலகத்தைப் பார்ப்பது போன்றும் நாம் உணர்ந்து கொள்ளலாம். அதற்கு மேலாக கல்விச் சமூகக் கடல-ில் மிதந்து வரும் படகுகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஒரு கலங்கரை விளக்கு போன்றது என்றும் நாம் கற்பனை செய்து திருப்தியடையலாம். இவையெல்லாம் யதார்த்த்தோடு ஒட்டிக்கொண்டிருக்கும் நம்பிக்கைகளோடு, பிணைந்த உண்மைகள் என்றும் கூறலாம்.

இவ்வாறன கம்பீரமான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தற்போது எல்லாப் பக்கங்களிலும் உதையும் அடியும் வாங்கும் ஒரு பந்தை போன்று சுழன்று கொண்டிருக்கின்றது. அறிவியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் தர-ரீதியாகவும் பல வெற்றிகளை ஈட்டிய எமது பல்கலைக் கழகம் தொடர்ச்சியாக இவ்வாறு உதை-தயும் அடியும் வாங்குவதற்குக் காரணம், அது ஒரு தமிழர் மண்ணுக்குரிய கல்விச் சாலை விளங்குவதே ஆகும்.

தமிழ் மண்ணில் நிமிர்ந்து நிற்கும் இந்த கல்விச்சாலையை எமக்கு ஆலமரமாகவும் நாம் கொள்ளலாம். இலங்கையின் எந்தப் பாகத்திலிருந்து இருந்து வந்து இங்கு கற்பதன் மூலம், பலதுறைகள் சார்ந்த வெற்றியாளர்களாகவும் நிபுணர்களாவும் வெளியே பூமியின் மேற்பரப்பரப்பெங்கும் தகைசாரந்தவர்களாக நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் இலட்சக் கணக்கான எம்மவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தமது கலங்கரை விளக்கின் மீதே பார்வையைச் செலுத்தியவர்களாக உள்ளார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகம் எத்தனையோ பட்டமளிப்பு விழாக்களைக் கண்டது. ஆயிரக்கணக்கான கலை இலக்கிய நாடக அரங்குகளைக் கண்டது அங்கிருக்கும கைலாசபதி அரங்கம். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பல மண்டபங்களும் விசாலமான விளையாட்டு மைதா-னமும் பல வெற்றிவிழாக்களையும், அரசறிவியல் கருத்தரங்குகளையும் கண்டவை. அறிவின் சுவா-லைகளும் மொழி உணர்வுப் பிளம்புகளும் அங்கு ஔர்ந்த வண்ணமே காணப்படும். அங்குள்ள அனைத்து பீடங்களின் கல்வித் தரம் என்பது மி-கவும் உயர்ந்தது.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை அடிப்பதும் உதைப்பதுமாக ஆட்சி பீடம் அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றது. தெருவில் முட்டாய் விற்கும் சிறுவர்களைப் போல அந்த பல்கலைக் கழக மாணவர்கள் ஆயுதப்படையினராலும், அரச அதிகார பீடத்தில் உள்ளவர்களாலும், சில வேளைகளில் அங்குள்ள தன்னலம் கருதிய பேராசிரியர்களினாலும் நடத்தப்படுகின்றார்கள். அங்கிருக்கும் பரமேஸ்வரன் ஆலயத்தை ஒரு திருக்கோவில் என்று அவர்கள் பார்ப்பதில்லை. அங்கிருக்கும் சிலைகளை கற்களாக மட்டுமே பார்க்கின்றார்கள். இதைப்போன்றே அங்குள்ள சில நினைவுத் தூபிகளையும் அவர்கள் பார்த்திருக்கவேண்டும்.

இவ்வாறான பார்வைகளின் வெளிப்பாடே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மிகவும் மூர்க்கத் தனமான முள்ளிவாய்க்கால் நினைவுத்தூ பி மீதான தகர்ப்பு நடவடிக்கை. இரவோ-டிரவாக அந்த உயிருள்ள கற்களை கதறக் கதற இடித்து தகர்த்தார்கள் அரசின் ஏவலாளர்களான பல்கலைக் கழக நிர்வாகிகள். சில நிமிடங்களில் பல்கலைக் கழகத்திற்கு வெளியே பூட்டப்பட்டிருநத இருப்புக் கதவுகளுக்கு அப்பால் ஆக்ரோசத்துடன் கூடினார்கள், பல்கலைக் கழகத்தின் மாணவச் சமூகமும், அரசியல் செயற்பாட்டாளர்களும், பொது மக்களும்.

2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் என்னும் சிவந்த மண்ணில் இரத்தம் தோய்ந்த சதைக-ளாய் மடிந்த நூற்றுக்கணக்கான பல்கலைக் கழக மாணவர்கள், அவர்களது உறவினர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோரின் அநியாய இழப்பின் அடையாளமாக விளங்கிய அந்த நினைவுச் சின்னத்திற்கு "அஞ்சலி செலுத்துவது போல வெ-ளியே ஆவேசக் குரல்களும் "ஐயோ" "ஐயோ" என்ற அழுகை ஒலியும் வானப் பிளந்து சென்று தேவலோகம் வாழ் தெய்வங்களுக்கு கொடிய செய்தியைக் கொண்டு சென்றன.

அங்கு கூடி நின்ற மாணவச் செல்வங்கள் வீரத்தாய்மார் பெற்ற பிள்ளைகள் போன்று குமுறினார்கள். மகாத்மாக்கள் போன்று மன்றாடினார்கள். "அந்நியன்" படத்தின் விக்ரம் போன்று மாறி மாறி கோபத்தையும் அவமானத்தையும் சோகத்தையும் வெளிப்படுத்தினார்கள். உணவை மறுத்து நோன்பிருந்து அந்த சோகங்களின் அடையாளக் குறிக்காக அஞ்சலி செலுத்தினார்கள். உலகெங்கும் உள்ள தமிழர் நெஞ்சங்கள் நொந்துபோனவையாக நொடிந்து போயிருக்கும் அந்த மண்ணில் நின்றவர்கள் தொடர்ந்து போராடினார்கள்.

எப்படிச் சாத்தியமானதோ? நாம் அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு "இறங்கி வந்த துணைவேந்தர் மாணவர்களோடு சேர்ந்து நின்று அவர்களின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். அஞ்சலி செலுத்த வேண்டிய நினைவுத் தூபியை அழித்து நொருக்கிய அவரது கையாலேயே மீண்டும் அடிக்கல்லை நாட்டினார். திங்கட்கிழமை நாள் இவ்வாறு சற்று தெளிந்த நிலையில் இருளைத் தழுவியது.

ஆனால் நாளை என்ன நடக்கும் என்ற கேள்விகளோடு நாமும் உறங்கச் செல்வோம். நாளை ஒரு விடியல் இருக்கின்றதே என்ற நம்பிக்கைகள் எம்மை வரவேற்கட்டும். ஒரு நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தப்படுகின்றது!

11-01-2021
**திங்கட்கிழமை**

# பொங்கலோ! பொங்கல்!
# உதயனின் வெள்ளிவிழாப் பொங்கல்!

*பொங்கலுக்கு முன்தினம்,*
*'கூவடா! தம்பி கூவு!*
*குரோனாவை விரட்டி விட்டேன் என்று',*
*கரும்பை கடித்துக் குதப்பும்*
*இளங்கன்றை நோக்கிக் கூறுகிறாள்,*
*அந்த குலவிளக்கு!*
*கொழுநனோ....*
*உடைத்தெடுத்த தேங்காயின் வெண்மை*
*எப்படி ஒட்டிற்று...!*
*என் பைங்கிளியின் பல் வரிசையில் என*
*காளையவன் அவள் முகத்தை*
*வியந்து நோக்க...*
*கட்டாணி முத்தழகி அருகில் வந்தாள்*
*காதருகே கிசுகிசுத்து அத்தான் என்றாள்,*
*மோதி வந்த தென்றலிலே சரிந்தது மாராப்பு,*
*மாதுளை உதடுகளால் தந்திட்டாள் முத்தமழை!*
*விடிந்தது இரவு...*
*கங்குலிலே துயில் நீங்கி*
*கங்கையில் நீராடி*
*மங்கையவள் பொன்மேனி*
*மணக்கோலம் தாங்கி வர*
*மார்பகத்தில் தாலி கொஞ்ச*
*மான்விழியாள் மணிக்கரத்தால்*
*மண்மகளின் மேனியிலே*
*வெண்ணிறத்தில் கோலமிட*
*செந்நிற கதிரவனும்*
*சிரித்த முகம் காட்டி நின்றான்!*

*பொங்கற் புதுநாள் தமிழர் திருநாள்!*
*எங்ஙனமோ ஓர் விழாக்கோலம்!*
*நாடெங்கும் நேற்றுவரை வந்த சங்கடம்*
*ஓய்வு எடுத்துக் கொள்கிறது!*
*எங்கிருந்தோ ஓர் மகிழ்ச்சி!*
*இல்லம் புகுந்து இதயம் புகுந்து,*
*தமிழரைப் பொலிவுள்ள,*
*பேசும் பொற்சித்திரமாக்கி விடுகிறது!*

*புத்தாடை! பாற்பொங்கல்! புன்னகை!*
*மழலை! கொஞ்சும் மொழி! கனிவு!*
*மகிழ்ச்சி! தாய்மையின் அழகொளி!*
*குடும்பப் பாசம்! விழாக்கோலம்!*
*அட்டியின்றி அரும்பும் மலர்களின்*
*பட்டியல் கூறின் விரியும்!*
*வறுமை ஒழிந்து விடுவதில்லை,*
*அன்று தலைகாட்ட அஞ்சுகிறது!*
*விசாரத்திலிருந்தும் மக்கள் விடுபடுவதில்லை!*
*அன்று ஓய்வு எடுத்துக் கொள்கிறார்கள்!*

*உருமாறும் குரோனோக்கள்*
*உருக்குலைந்து சாம்பலாக...*
*சிறுபிறையின் நுதலுடையாள்,*
*செங்கரத்தால் தீ மூட்டி*
*நெருப்பு சுவாலையிலே*
*தீயவற்றை பொசுக்கிவிட்டு...*

*மண்ணில் நெல் விளைத்த*
*மாந்தர்தம் உழைப்பதனை*
*பொங்கலோ பொங்கலென்று...*
*பூரித்துப் பாடுகையில்...!*

*மஞ்சள் இலை செவ்விளநீர்*
*மணம் வீசும் மலர் கொத்து*
*மா பலா வாழையுடன்*
*கற்கண்டு கரும்பு கருணை நிறை பசும்பால்,*
*புதுப்பானை ' புத்தரிசி*
*புதுப்பயறு புதுவெல்லம்*
*புத்தாடை அணிந்த*
*பூவிழியால் புன்னகை*
*எல்லாமே புதுசு இங்கே!*

*எங்களில் பலருக்குப்*
*பொங்கலின் தத்துவம்*
*புரியாமல் போனதேனோ!*
*பழமையை விரட்டி விடு!*
*புதுமையை சேர்த்துவிடு!*
*புதிய சிந்தனைக்குப்*
*புதுப் பாதை அமைத்து விடும்*
*பொங்கல்விழா இது!*
*புதுமையின் பிறப்பிடம்!*

*புதுடெல்லியில் கூடிய*
*உழைப்பவன் உழுபவன்*
*சிந்திடும் வியர்வையின்*
*முளைக்கின்ற பயிர் இது! முற்றிய கதிர் இது!*
*விளைநிலத்தில் களை அகற்றிக் காத்திடும்*
*உழவரிவர்,*
*கவலைகள் அகலட்டும் கடுந்துயர் நீங்கட்டும்!*
*வேளாண் சட்டங்கள் விதி வழி மாறட்டும்!*
*கதிரவன் ஒளி பட்டு காரிருள் மறையட்டும்!*

*அன்பும் அறனும் எங்கும் பொங்குக!*
*கல்வியின் பயன் பெற கற்றவர் பொங்குக!*
*சூதும் வாதும் சூழ்ச்சியும் அழியட்டும்!*
*ஒற்றுமை பொங்கி ஓருருக் கொண்டு,*
*ஒன்றே குலமென ஓங்குக பொங்கல்!,*

*நன்றே நாமினி நன்மைகள் பேசி*
*நாட்டு நலனில் நாட்டங் கொண்டு*
*வாடிய பயிருக்கு வான்மழை போன்று*
*பாடிடும் பொங்கலில் பகமைகள் விலகட்டும்!*

*முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை*
*பல்கலைக்கழக முன்றலில் மீண்டும்*
*எழுப்பி நிற்கப் பொங்குக பொங்கல்!*

*தேசமைந்தன் சிந்திடும் வியர்வையும்*
*செந்நிற இரத்தத் துளிகளின் மண்ணையும்,*
*சிவசிவ என்றே நெற்றியில் பூசு!*

*பாசம் நேசம் பற்றுக்கொண்டு*
*பசியும் பிணியும் பறந்திடச் செய்து*
*பார் சிறக்க பொங்குக பொங்கல்!*
*வெள்ளி விழாவினை காணப்போகும்*
*'உதயன்' ஏட்டின் எல்லாப்பக்கமும்*
*இனிய தமிழே என்றும் பொங்குக!*

**- வீணைமைந்தன்**

# அவசரகாலச் சட்டமும் சமுதாயத்தின் பிரதிபலிப்பும்


நக்கீரன்

கோலாலம்பூர், ஜன.14:

மலேசியாவிற்கும் அவசரகாலச் சட்டத்திற்கும் நெருங்கிய தொடர்பும் பரிச்சயமும் உண்டு. பொதுவுடை (கம்யூனிச) இயக்கத்தையும் அதன் நடவடிக்கையையும் முறியடிப்பதற்காக பிரிட்டீஷ் மலாயாவில் 1948-இல் அவசகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டதுதான் நாடு எதிர்கொண்ட முதல் அவசரக-ாலச் சட்ட அமலாக்கம்.



மலாயா, மலேசியாவாக பரிமாணம் அடைந்தபின், பல்வேறு காலகட்டங்களில் இந்த அவசரகால சட்டத்தை எதிர்கொண்டுவந்த நிலையில் தற்பொழுது 2021-ஆம் ஆண்டு மலர்ந்துள்ள இந்த வேளையில் தேசியக் கூட்டணி அரசாங்கத்தின் சார்பில் இப்போது அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இருந்தாலும் இராணுவத்தின் ஆதிக்கமோ, காவல்துறையின் மேலாதிக்கமோ என எதுவும் இருக்காது என்றும் சட்டத்தின் ஆட்சியும் நீதி பரிபாலன கட்டமைப்பும் எவ்வித இடையூறும் இன்றி வழக்கம்போல இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் நாடாளுமன்றமும் மாநிலங்களின் சட்டமன்றமும் முடக்கப்பட்டிருக்கும் என்று அழுத்தமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நேற்றைய முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ள அவசரகால சட்டம் குறித்து பல்வேறு தரப்பினரும் தத்தம் கருத்தை மக்கள் ஓசை இதழுக்காகப் பதிவு செய்துள்ளனர்.

கங்காதரன் - வழக்கறிஞர்


ஒன்பதாவது முறையாக தற்பொழுது பிரகடனம் செய்யப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தால், நாட்டில் நடைபெற்றுவரும் சட்டத்தின் ஆட்சிக்கு எந்த பங்கமும் ஏற்படவில்லை. அரசியல் சாசனத்தில் சட்டப் பிரிவு 1.0-இன் படி பிரதமரின் ஆலோசனையை ஏற்று மாமன்னர் இந்த அறிவிப்பைச் செய்துள்ளார். இந்த சிறப்பு சட்டத்தை அறிவிக்க அவருக்கு மட்டுமே அதிக-ாரமும் சிறப்புரிமையும் சட்டத்தின்படி உள்ளது.



தற்போதைய சூழலில் கொரோனா நச்சுயிரியின் தாக்கத்தை மட்டுப்படுத்துவதற்காக இந்த அவசர காலச் சட்டம் என்று அறிவிக்கப் பட்டாலும் இதில் பொதிந்துள்ள அரசியல் கூறு, பொதுமக்களின் எண்ணம், எதிர்பார்ப்பு என்பதெல்லாம் போக போக தெரி-யவரும் என்று வழக்கறிஞரும் சமுதாயப் போராளியுமான கங்காதரன் கருத்து தெரிவித்துள்ளார்.

முத்தரசன் - செல்லியல் (இணைய இதழ்) நிருவாக ஆசிரியர் & அரசியல் விமர்சகர்

கோவிட்-19இன் தாக்கத்தை மலேசியா மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்துமே எதிர்கொண்டுள்ளன. ஆனால், எந்த நாடும் இதற்காக அவசரகா-ல சட்டத்தைப் பிரகடனப்படுத்தவில்லை. கொரோனா பரவல் கடந்த ஆண்டில் ஒரு கட்டத்தில் முழு கட்டுப்பாட்டிற்கு வந்தபோது, அதைத் தற்காக்க அரசு தவறிவிட்டது.



பெரும் மக்கள் தொகை கொண்ட இந்தியாவே அவசரகால சட்டத்தைப் பற்றி சிந்திக்கவில்லை என்பது ஒருபுறம் இருக்க, அந்த நாட்டில் கொரோ-னா பாதிப்பு ஒரு கட்டுக்குள் வந்துள்ளது. அதை-விட, அசோக சாம்ராஜியமும் மௌரியப் பேரசும் ஒரு காலத்தில் முரசு கொட்டிய பாடலிபுத்திரம் நகரை (பாட்னா) தலைநகராகக் கொண்ட பீகா-ர் மாநிலத்தில் பொதுத் தேர்தலும் அண்மையில் நடத்தப்பட்டது. அப்பொழுதெல்லாம் அந்த நாடு அவசரகால சட்டத்தைப் பற்றி சிந்திக்கவில்லை.

நம் அண்டை நாடான சிங்கப்பூர்கூட, இந்தக் கொரோனா பருவத்தில் பொதுத் தேர்தலையே நடத்தி முடித்துவிட்டது. அந்த நாடும் அவசரகால சட்டத்தைப் பற்றி கருதவில்லை.

கொரோனா பரவலை மட்டுப்படுத்தவும் கட்டுக்குள் கொண்டுவரவும் நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணையே போதுமானது. மலேசியாவில் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களின் முடக்கத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பது நாட்டு அரசியலை உற்று நோக்கி வருபவர்களுக்கு நன்கு தெரியும். இது, அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் பிரதிபலிக்கும் என்று வழக்கறிஞருமான முத்தரசன் கருத்து தெரிவித்துள்ளார்.

ச.த. அண்ணாமலை, தலைவர் - திராவிடர் கழகம்

மககளின் நலனையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு அவசரகா-லச் சட்டம் நாட்டில் அறிவிக்கப்பட்டாலும், சபா மாநில சட்டமன்ற தேர்தலுக்குப் பின்னர்தான் தீபகற்ப மலேசியாவில் கோவிட்-19 இன் தாக்கம் இந்த அளவுக்கு உச்சத்தைத் தொட்டுள்ளது. சபா மாநிலத் தேர்தல், தேவையின்றி தலைவர்களே உருவாக்கியது. எது எவ்வாறாயினும் அவசர காலச் சட்டம் மாமன்னரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு மக்கள் மதிப்பளிக்கத்தான் வேண்டும். ஆனாலும், இந்த நிலை நீடிப்பது ஜனநாயகத்திற்கு ஏற்புடையதல்ல என்றார்.



மோகன்ஷான், தலைவர் - இந்து சங்கம்

மாமன்னரின் அறிவிப்புக்கு மாற்று ஏது? நாட்டு மக்களையும் மக்களின் சுகாதார அம்சத்தையும் கருத்தில் கொண்டு நாட்டில் அவசரகாலச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதை அனைவரும் ஏற்று, பின்பற்ற வேண்டும். அதேவேளை, சமய வழிபாட்டிற்கோ ஆன்மிக நடவடிக்கைக்கோ எந்தப் பாதிப்பும் இல்லை. மலேசிய இந்துக்கள் அனைவரும் நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணைக்கு மதிப்பளித்து தங்களின் இறைக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

சுப. நாராயணசாமி, நிருவாகச் செயலாளர் - நேதாஜி மையம்.



நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணை என்பதே பாதி அவசரகால சட்டம் போன்றது. இப்படிப்பட்ட நிலையில், முதல் நாள் நடமாட்ட கட்டுப்பாட்டு உத்தரவை அறிவித்துவிட்டு அடுத்த 17 மணி நேரத்தில் அவசரக-ால சட்டத்தை தேசியக் கூட்டணி முன்னெடுத்ததில் நிச்சயம் அரசியல் தன்மை உள்ளது.

நாடாளுமன்றத்தையும் சட்டமன்றங்களையும் முடக்குவதற்காக மட்டும் அவசரகால சட்டம் என்றால், இதில் மக்கள், குறிப்பாக வாக்காளர்கள் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் முடிவெடுப்பார்கள் என்றார்.

வே.விவேகானந்தன், மூத்த பத்திரிகையாளர்.



கோவிட்-19 பரவலைத் தடுப்பதற்காக நாட்டில் அவசரகால சட்டத்தை அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. இது இல்லாமலேயே, நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையையும் அதன் அமலாக்கத்தையும் துணைகொண்டே இந்தக் ஆட்கொல்லி கிருமியின் பரவலின் சங்கலித் தொடர்பை அறுக்க முடியும். உண்மை நிலை இப்படி இருக்கும்பொழுது, நாடாளுமன்ற, சட்டமன்றங்களின் முடக்கத்தை மட்டும் இலக்காகக் கொண்டு இப்படி அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதால், தற்போதைய தேசியக் கூட்டணி அரசு நாடாளுமன்றத்தில் எதிர்கொண்டுள்ள பின்னடைவு, சிக்கலின் விளைவாகத்தான் இந்த முடிவுக்கு வந்திருப்பதாக பொதுமக்களிடையே பரவலாக கருத்து நிலவுகி-றது.

**- நக்கீரன்** (Nakkeeran)**: 013-244 36 24**

# அன்பின் தொனி - 594

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்?**

தேவனே, புறஜாதியார் உமது சுதந்தரத்தில் வந்து, உமது பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுப்படுத்தி, எருசலேமை மண் மேடுகளாக்கினார்கள். உமது ஊழியக்காரரின் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும், உமது பரிசுத்தவான் களின் மாம்சத்தைப் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக் கொடுத்தார்கள். எருசலேமைச் சுற்றிலும் அவர்களு டைய இரத்தத்தை தண்ணீரைப்போலச் சிந்தினார்கள், அவர்களை அடக்கம்பண்ணுவாருமில்லை. எங்கள் அயலாருக்கு நிந்தையும், எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியா-சமும் சக்கந்தமுமானோம். எதுவரைக்கும் கர்த்தாவே! நீர் என் றைக் கும் கோபமாயிருப்பீரோ? உம்முடைய எரிச்சல் அக்கினியைப்போல் எரியுமோ? உம்மை அறியாத ஜாதிகள் மேலும், உமது நாமத்தைத் தொழுதுகொள்ளாத ராஜ்யங்கள்மேலும், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும். ஆவர்கள் யாக் கோபைப் பட்சித்து, அவன் குடியிருப்பைப் பாழாக்கினார்களே. பூர்வகாலத்து அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாக நினையாதேயும், உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக, நாங்கள் மிகவும் தாழ்த்தப் பட்டுப்போ னோம். எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவிசெய்து, உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து, எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும். அவர்களு டைய தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்? உமது ஊழியக்காரருடைய சிந்துண்ட இரத்தத்தின் பழி வாங்குதல் ஜாதிகளுக் குள்ளே எங்கள் கண்களுக்கு முன்பாக விளங்கும்படி செய்யும். கட்டுண்டவனுடைய பெரு மூச்சு உமக்கு முன்பாக வரட்டும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை உமது புயபலத்தினால் உயிரோடே காத்தரு ளும். ஆண்டவரே, எங்கள் அயலார் உம்மை நிந்தித்த நிந்தையை, ஏழத்தனையாக அவர்கள் மடியிலே திரும்பப் பண்ணும். அப்பொழுது, உம்மு டைய ஜனங்களும் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் உம்மை என் றென்றைக்கும் புகழுவோம், தலை முறை தலைமுறையாக உமது துதியைச் சொல்லிவருவோம்.- **சங்கீதம் 79: 1-13**

**சேனைகளின் தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும்,** இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல் நடத்துகிறவரே, செவிகொடும், கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும். எப்பிராயீம் பென்யமீன் மனாசே என்பவர்களுக்கு முன்பாக, நீர் உமது வல்ல மையை எழுப்பி, எங்களை இரட்சிக்க வந்தருளும். தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத் தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம். சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உமது ஜனத் தின் விண்ணப்பத்துக்கு விரோதமாய் நீர் எதுவரைக்கும் கோபங்கொள்வீர். கண்ணீராகிய அப்பத்தை அவர்களுக்கு போஜ னமா-கவும், மிகுதியான கண்ணீரையே அவர்களுக்குப் பானமாகவும் கொடுத்தீர். எங்கள் அயலாருக்கு எங்களை வழக் காக வைக்கிறீர், எங்கள் சத்துருக்கள் எங்களைப் பரியாசம்பண்ணுகிறார்கள். சேனைகளின் தேவ னே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப் படு வோம். நீர் எகிப்தி லிருந்து ஒரு திராட்சக்கொடியைக்

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

# இவ்வார ராசிபலன்

## 15-01-2021 வெள்ளி தொடக்கம் 21-01-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகக்கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும். வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி
அதிர்ஷ்ட எண்: 1,9,5,2, அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**ரிஷபம்:** ஆதாயமும். ஆதாரமும். அதிகாரமும் சேரக்கூடிய அற்புதமான வாரம். சுய விடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வேலவப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்ம பலம் பெறக்கூடிய அற்புதமான வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நவ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக்கூடிய வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும் நாள். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்ச பூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**சிம்மம்:** இனிய கனாக் காணவும், இன்ப உலா செல்லவும் இனிமையான வாரம். காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உணடு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: சுக்கிர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**கன்னி:** வீணான அலைச்சலும், வேதனைக் காலங்களும் விலகக்கூடிய அற்புதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.பேச்சில் கணிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** வாடும் நிலை விலகி வீடு, நிலமும் வாங்கக் கூடிய நல்ல வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உடல் நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மன மகிழ்ச்சி அதிகர. இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஏழுமலை ஆண்டவர், அதிர்ஷ்ட எண்: 3,4,6,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




**விருச்சிகம்:** அனைத்து விதத்திலும் ஆதாயம் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். வாகனத்தில் செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றிதரும். நீண்டநாள் கனவு நிறைவேறும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். உத்தியோக உயர்வு கிட்டும். வழிபடவேண்டிய தெய்வம்: திருமுருகக் கடவுள்
அதிர்ஷ்ட எண்: 3,8,4,9, அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H




**தனுசு:** மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பக்கூடிய மகத்தான வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. பொருளாதாரம் மேம்படும். துணிவோடு செயல்படுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,K




**மகரம்:** தொழில் வகையில் மேன்மையும், தொகை தொகையாய் லாபமும் சேரக்கூடிய வாரம். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். சேமிப்பு அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். பண வரவு மேலோங்கும். பாக்கிகள் வசூலாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். மனித நேயம் மிகுதியாகும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சுபச் செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவு போகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்கள மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,6,4,0
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,N




**கும்பம்:** வீரியமான செயல்பாடுகளால் விசேஷமான பலன்கள் கிடைக்கக்கூடிய வாரம். கன்னிப் பெண்களின் உற்சாகம் அதிகரிக்கும். உங்களால் மற்றவர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். கர்ம வினைகள் அகலும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. நிதானத்தோடு செயல்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் பொலிவு
வழிபடவேண்டிய தெய்வம்: சுவாமி தர்ம சாஸ்த்தா, அதிர்ஷ்ட எண்: 2,1,0,0
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R




**மீனம்:** நாடிய பொருளும், தேடிய வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். கடன் உபத்திரவம் குறையும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். வெற்றி நிலை தொடரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். எதிர்பாராத லாபம் சேரும். எண்ணிய காரியம் கூடும். இல்லத்தில் நல்லவை நடக்கும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பழையக் கடன் தீரும். புதிய வாய்ப்பு கூடும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சிஅம்மன், அதிர்ஷ்ட எண். 5,3,0,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,W




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068**
**9940431377**


(26ம் பக்கத் தொடர்ச்சி)


# அன்பின் தொனி

கொண்டுவந்து, ஜாதிகளைத் துரத்திவிட்டு, அதை நாட்டினீர். அதற்கு இடத்தை ஆயத்தப்படுத்தினீர், அது வேரூன்றி, தேசமெங்கும் படர்ந்தது. அதின் நிழலால் மலைகளும் அதின் கிளைகளால் திவ்வியமான கேதுருக்களும் மூடப்பட்டது. அது தன் கொடிகளைச் சமுத்திரமட்டாகவும், தன் கிளைகளை நதிமட்டா கவும் படரவிட்டது. இப்பொழுதோ வழிநடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக, அதின் அடைப்புகளை ஏன் தகர்த் துப்போட்டீர்? காட்டுப்பன்றி அதை உழுது போடுகிறது, வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்துபோடுகிறது. சேனை களின் தேவனே, திரும்பி வாரும், வானத்திலிருந்து கண்ணோக்கிப்பார்த்து, இந்தத் திராட்சச் செடியை விசாரித்த ருளும், உம்முடைய வலதுகரம் நாட்டின கொடியையும், உமக்கு நீர் திடப்படுத்தின கிளையையும் கடாட்சித்தருளும். அது அக்கினியால் சுடப்பட்டும் வெட்டுண்டும் போயிற்று, உம்முடைய முகத்தின் பயமுறுத்தலால் அழிந்து போகிறார் கள். உமது கரம் உமது வலதுபாரிசத்துப் புரு'ன்மீதிலும், உமக்கு நீர் திடப்படுத்தின மனு' குமாரன்மீதிலும் இருப்பதாக. அப்பொழுது உம்மைவிட்டுப் பின்வாங்கமாட்டோம், எங்களை உயிர்ப்பியும், அப்பொ ழுது உமது நாம த்தைத் தொழுதுகொள்ளுவோம். சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, எங்களைத் திருப்பிக் கொண்டு வாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.- **சங்கீதம் 80: 1- 19**

**என் ஜனமே கேள், உனக்குச் சாட்சியிட்டுச் சொல்லுவேன்**

நம்முடைய பெலனாகிய தேவனைக் கெம்பீரமாய்ப் பாடி, யாக்கோபின் தேவனைக்குறித்து ஆர்ப்பரியுங்கள். தம்புரு வாசித்து, வீணையையும் இனிய ஓசையான சுரமண்டலத்தையும் எடுத்து, சங்கீதம் பாடுங்கள். மாதப்பிறப்பிலும், நிய மித்தகாலத்திலும், நம்முடைய பண்டிகைநாட்களிலும், எக்காளம் ஊதுங்கள். இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும், யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது. நாம் அறியாத பாஷை'யைக்கேட்ட எகிப்துதேசத்தைவிட்டுப் புறப் படுகையில், இதை யோசேப்பிலே சாட்சியாக ஏற்படுத்தினார். அவன் தோளை சுமைக்கு விலக்கினேன், அவன் கைகள் கூடைக்கு நீங்கலாக்கப்பட்டது. நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய், நான் உன்னைத் தப்புவித்தேன், இடிமுழக்கம் உண்டா கும் மறைவிடத்திலிருந்து உனக்கு உத்தரவு அருளினேன், மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் உன் னைச் சோதித்து அறிந்தேன். என் ஜனமே கேள், உனக்குச் சாட்சியிட்டுச் சொல்லுவேன், இஸ்ரவேலே, நீ எனக்குச் செவி கொடுத்தால் நலமாயிருக்கும். உனக்குள் வேறு தேவன் உண்டாயிருக்கவேண்டாம், அந்நிய தேவனை நீ நமஸ்கரிக்கவும் வேண்டாம். உன்னை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே, உன் வாயை விரிவாய்த்திற, நான் அதை நிரப்புவேன். என் ஜனமோ என் சத்தத்துக்கு செவிகொடுக்கவில்லை, இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை. ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன், தங்கள் யோசனைகளின்படியே நடந்தா ர்கள். ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! நான் சீக்கிரத் தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன். அப் பொழுது கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள், அவர்களுடைய காலம் என்றென்றை க்கும் இருக்கும். உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார், கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்.- **சங்கீதம் 81: 1- 16**

# மரண அறிவித்தல்



# Dr. ராம் சிவலிங்கம் ராமலிங்கம்

**யாழ். தென்மராட்சி மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட Dr. ராம் சிவலிங்கம் ராமலிங்கம் அவர்கள் 09-01-2021 சனிக்கிழமை அன்று காலமானார்.**

அன்னார் காலஞ்சென்ற A.K இராமலிங்கம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி அரியரத்தினம் தம்பதிகளின் மருமகனும், Dr. நிர்மலாவின் அன்புக்கணவரும், மீராவின் அன்புத் தந்தையும், சிவாவின் அன்பு மாமனாரும், நிலா, நவினா ஆகியோரின் அன்புத் தாத்தாவும், இரத்தினலிங்கம் (கொழும்பு), இராசலிங்கம் (கனடா), சுந்தரலிங்கம் (விசுவமடு), அமிர்தவல்லி (கனடா), எல்லாள இராசலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்க முடியும் என்பதை பணிவுடன் அறியத்தருகின்றோம்.

**தகவல் குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
1. Dr. நிர்மலா சிவலிங்கம் (மனைவி) 647 760 6766
2. மீரா சிவலிங்கம் (மகள்) 647 564 5633
3. எல்லாளன் (சகோதரன்) 416 435 5956
4. இராசலிங்கம் (சகோதரன்) 647 501 5195
5. அமிர்தவல்லி (சகோதரி) 905 290 0802

# எங்கள் குடும்ப விளக்கின்
# 31ம் நாள் நினைவாஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
23-04-1935



ஆண்டவன் அடியில்
18-12-2020

# திரு கதிர் துரைராசா

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்ற கதிர்-செல்வி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதிகளின் மகளாகிய எமது அம்மாவை திருமணம் செய்து சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையின் மறைவின் 31ம் நாள் நினைவஞ்சலி நாளில் அவரது நினைவுகளைப் பகிர்ந்த கொள்கின்றோம்.

நால்வராய் எம்மைப் பெற்றெடுத்து அனைத்துச் செல்வங்களையும்
எமக்காய்த் தேடித் தந்து, இறுதிவரை மகிழ்வித்தார்
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எங்கள் அப்பாவின்
நினைவுகள் எம்மோடு கூடவே குடியிருக்கும்

என்றும் அவர் பிரிவால் தவிக்கும் அவரது அன்பு மனைவி துரையம்மா, மகள் தேவி, மருமகன் ஜெகா மகன்மார் ரவி(சுவிஸ்) புவி (சுவிஸ்) பாஸ்கல்(சுவிஸ்) மற்றும் மருமக்கள் வவி, நாதியா, லலிதா, மற்றும் பேரப்பிள்ளைகளான நிரு, நிமல், நிசாந்த், பிரியா, ருபிந்தா, யசி, தனு, மது, திரியங்கா, ஜானிஸ், ஜோயல் அவினா, மற்றும் அக்காமார் சோதிப்பிள்ளை இராசம்மா, தங்கை சரஸ்வதி, தம்பி பாலசிங்கம், பெறாமகன் பஞ்சலிங்கம், பெறாமகள் தரிசா, மைத்துனன் சுந்தரம், (அவுஸ்த்திரேலியா) மற்றும் பத்மா-பிள்ளைகள்

எங்கள் அப்பாவின் துயரச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் தங்கள் அனுதாபங்களையும் அஞ்சலிகளையும் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் பல நாடுகளிலிருந்தும் மலர் வளையங்கள் மறறும் கண்ணீர் அஞ்சலிகள் அனுப்பியவர்களுக்கும், அறிவித்தல்கள் மற்றும் உணவு வகைகள் ஆகியவற்றை உறவுகள் மூலம் வழங்கியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது அன்பு அப்பாவின் ஆத்மா சாந்தியடைய
அனைவரும் இறைவனை பிரார்த்திப்போமாக!

தொடர்புகளுக்கு
தேவி:- 647 438 4186
புவி:- 41-794490809
பாஸ்கல்:- 41 77 4001029

*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #30 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

எங்களுடைய தலைமுறையில் எங்களில் ஒருவராக வாழ்ந்து சாதனைகள் பல படைத்து அடுத்த நூற்றாண்டிலும் எங்களுடன் கை கோர்த்து நடந்து வரப்போகும் மாபெரும் கலை மேதையின் கலையுலகச் சுவடுகளைப் புதியவர்களுக்கும் மறந்தவர்களுகும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் விதமாக அவரிடத்து கொண்ட அன்பின் நிமித்தம் நினைவுபடுத்தி யாவரையும் மகிழ்ச்சியுடன் வாசிக்க வைப்பதே - அவர் தம் பெருமையை உணர வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்!



சிவாஜி அவர்களுடன் சகோதர வாஞ்சையுடன் பழகி வரும் இசையரசி ஒருவரது மாபெரும் பாராட்டு பற்றி குறிப்பிட உள்ளேன்! தினசரி உலகின் ஏதாவது ஒரு வானொலியில் எப்போதும் ஒரு குயிலின் குரல் ஒலித்துக்கொண்டேயிருக்கும். இப்பெருமை எந்த பாடகருக்கும் கிட்டாத பெருமை! அந்த இந்தியக் குயிலின் பெயர் லதா மங்கேஷ்கர்! உலகின் சாதனை படைத்த இசை பாடகிகளுள் லதா மங்கே'கர் முதன்மையானவர்! லதா மங்கேஷ்கர் பெருமை படைத்த மகாராஷ்டிரக் குடும்ப பின்னணியில் பிறந்து கடும் உழைப்பாலும் - திறமையாலும் முன்னேறி ஒப்பாரும், மிக்காருமின்றி புகழ் கொடி நாட்டிய இசைக்குயில்! இந்தியா என்றால் நேரு - காந்தி - ராஜ்கபூர் - இந்திரா காந்தி - சுந்தர்பிச்சை - அப்துல்கலாம் என்ற வரிசையில் லதாவும் தனியிடத்தை இசையால் வசமாக்கியவர்!

இவ்வளவு பெருமை வாய்ந்த லதா மங்கேஷ்கர் சிவாஜி அவர்களுக்கு உடன்பிறவா சகோதரி என்பது பலருக்கு தெரியாத விடயம். (பம்பாய்) மும்பைக்கு சிவாஜி அவர்கள் எப்போதும் சென்றாலும் லதா மங்கேஷ்கர் சகோதரிகள் வீட்டில் விருந்துண்ணாமல் திரும்ப மாட்டார். அதேபோல் தான் லதா உஷா மங்கேஷ்கர் சகோதரிகள் சென்னை வரும்போது "அண்ணா" என்று வாஞ்சையுடன் அன்னை இல்லத்திற்கு வருவார்கள். சிவாஜி அவர்களுடைய போக் ரோடு (செவாலியே சிவாஜி கணேசன் சாலை) "அன்னை இல்லத்தில்" லதா சகோதரிகளுக்கு என்று தனி விருந்தினர் விடுதி உண்டு. அவர்களுக்கான விருந்துபசார மேசை மற்றும் சமாச்சாரங்களை சிவாஜி ஐயா அவர்களின் இல்லத்தரசி திருமதி கமலா அம்மா சொல்லச் சொல்ல நேரில் பார்த்தவன் நான். இந்திய இசைக்குயில் செல்வி லதா மங்கே'கர் மகாராஷ்டிர மன்னன் கலை மேதை "தீனானத் மங்கே'கர்" பெயரால் 1993இல் ஏற்படுத்திய "கலை விருதை" முதன்முதலாக சிவாஜி கணேசன் அவர்களுடைய கலைப் பணியை கவுரவிக்கும் பொருட்டு வழங்கியபோது வாசித்து வழங்கிய வாழ்த்து மடலை இங்கு தருகிறேன்.

டாக்டர் சிவாஜிக்கு லதா மங்கேஷ்கர் பாராட்டு. பிரபல பின்னணி பாடகி செல்வி லதா மங்கேஷ்கர் அவரது தந்தையின் நினைவாக டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு "தீனாநாத் மங்கே'கர்" விருதினை 1993இல் அளிக்கும் போது வாசித்த அளித்த வாழ்த்து மடல்.

"மேன்மை பொருந்திய திருவாளர் சிவாஜி கணேசன் என்கிற விழுப்புரம் சின்னையா கணேசன் தென்னிந்தியாவில் வாழ்ந்து வரும் நடிப்புக் கலையில் சாதனைகள் பல புரிந்த சரித்திர நாயகன். ஐயா, 50 ஆண்டுகாலம் படர்ந்துள்ள தங்களின் அபாரமான ஈடு இணையில்லா மேடை மற்றும் சினிமாவிலான கலைச் சேவையைப் பாராட்டும் வண்ணம், இந்த தீனானத் மங்கேஷ்கர் பிரிட்டி'தனின் 1993 ஆம் ஆண்டிற்கான "தீனாநாத் மங்கேஷ்கர் விருது" தங்களுக்கு உவந்தளிக்கப்படுகிறது. மராட்டிய இசை நாடகத்தின் பொற்காலத்தைப் பற்றி பேசும், ஒவ்வொரு மராட்டிய குடும்பத்திலும் உச்சரிக்கப்படுகின்ற பெயரான தீனானத் குருவின் பெயரால் 1993-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட விருது இது!



மகாராஷ்டிரா இசை - நாடக - உலக சரித்திர நாயகனின் நினைவுகளும் வண்ணம் ஏற்படுத்தப்பட்ட இந்த விருதினை கொண்டு தென்னிந்தியாவில் வாழ்ந்து வரும் சரித்திர நாயகனான தங்களை கௌரவிப்பதில் இந்த தீனானத் மங்கேஷ்கர் பிரிட்டிஷ்தன் பெருமை அடைகிறது! பள்ளிக்கு செல்ல இயலாமல் நாடகக் குழுவில் இணைந்து, இளமை காலத்தில் பெண் வேடம் போடுவது முதல் வறுமையை எதிர்த்துப் போராடியது வரை தங்களுக்கும், தீனாநாத் இருவருக்கும் பல ஒற்றுமைகள் இயற்கை உங்கள் இருவருக்குமே எவருக்கும் இல்லாத மிகச் சிறந்த நடிப்பு கலையையும் குரல் வளத்தையும் தந்தது. பற்பல எதிர்ப்புகளுக்கு இடையே தங்களின் திறமையால் மட்டுமே வெற்றிவாகை சூடியவர்கள் நீங்கள். ஐயா, பல வண்ணங்களையும், ஏற்ற இறக்கங்களையும் தரக்கூடிய தங்களின் குரல் வளம் கொண்டு உணர்ச்சிகளை கற்பனைக்கெட்டிய அத்தனை வகைகளிலும் நுணுக்கமாகக் காட்டக்கூடிய திறம் படைத்தவரும், கடினமான சொற்கள் நிறைந்த பல பக்க வசனங்களை கூட நினைவில் நிறுத்தி தடையில்லாமல் பேசி முடிக்கும் ஆற்றல் படைத்த நீங்கள் எந்த கதாபாத்திரத்திலும் ஒப்பற்ற வெற்றி பெறுவீர்கள்.

எழுத்தாளர், நாடகாசிரியர், சீர்திருத்தவாதி, பழுத்த அரசியல்வாதி என்ற அனைத்தும் ஒருங்கிணைந்து உருவமாய் இருந்த திரு சி என் அண்ணாதுரையின் நாடகக்குழுவில் தங்களின் இளமைக் காலம் அனுபவத்தினால் மெருகேறியது. மராட்டிய சாம்ராஜ்யம் கண்ட சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் வேடமேற்று சிறப்பாக நடித்த தங்களை மாபெரும் பகுத்தறிவுவாதி திரு. ஈ. வே ராமசாமி நாயக்கர் பாராட்டி "சிவாஜி" என்ற பட்டமளித்து வி. சி கணேசனை, "சிவாஜிகணேசன்" என மாற்றிய அந்த நாட்களை நினைவு கூறுகிறோம்!

தயாரிப்பாளர்களுக்கும், இயக்குனர்களும் தங்கள் படங்களில் உங்களை நடிக்க வைக்க வேண்டும் என்று பேரவாவை ஏற்படுத்தியது. 1960ஆம் ஆண்டுகளில் பாரதி கலை மன்றத்தின் சார்பில் தங்களின் பம்பாயில் நடத்திய புராணம் மற்றும் சரித்திர நாடகங்களையும் அவற்றை காண திரண்டு வந்து பரவசமடைந்த தங்களின் ரசிகர்களையும் இந்த பிரிட்டிஷ் தீன் நினைவு கூறுகிறது! சிவாஜி மகாராஜாவின் கதாபாத்திரத்தை ஏற்று சிறப்பாக நடித்ததினால் பண்பட்ட ஒவ்வொரு மராட்டியரின் இதயத்திலும் நீங்கள் ஒரு தனி இடம் பிடித்திருக்கிறீர்கள். மகாராஷ்டிரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் உங்களது பெயர் மிகவும் பிரசித்தி பெற்றதே! இதனால் மேடையிலும் சினிமாவிலும் தாங்கள் ஏற்று ஏனைய கதாப்பாத்திரங்களைக் குறைத்து மதிப்பிடுவதாக இல்லை. புராணமானாலும் சரி, சரித்திரமானாலும் சரி, சமூகமானாலும் சரி, உங்களின் நடிப்புத்திறன் எந்தக் கதாபாத்திரத்தையும் நினைவிலிருந்து அகற்றா வண்ணம் முத்திரைப் பதிந்துவிடும். உங்களின் திறனால் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் எலும்பும் சதையுமட்டுமின்றி ரத்தத்தையும் உடன் ஏற்றி மெருகேற்றுவீர்கள். ஐயா, ஒரு முழுமையான உண்மையான கலைஞனால் மட்டுமே மற்றொரு சக கலைஞனை இனம் கண்டுகொள்ள முடியும். மராட்டிய இசை நாடக மேடையின் ஜாம்பவானாகிய "பாலாகந்தர் வாவை" தாங்கள் சந்தித்தது ஒரு சரித்திர நிகழ்ச்சியாகும். இந்த சந்திப்பு பம்பாயில் கலாச்சார சரித்திரத்தில் இரண்டு சிறந்த கலாச்சாரங்கள் ஒன்றையொன்று சந்தித்த நன்னாளாக பொறிக்கப்படுகிறது.

ஐயா!

1993 ஆம் ஆண்டிற்கான தீனானத் மங்கேஷ்கர் விருதினை தங்களுக்கு உவந்தளித்து கௌரப்பதில் இந்த "தீனானத் மங்கேஷ்கர் பிரிட்டிஷ் தீன்" பெருமையடைகிறது.

பூனா, ஏப்ரல் 24 1993

பெருமைகள் தொடரும்... வீணை மைந்தன்

மின்னல் வேகத்தில் பாதத்தை மேலே தூக்கி கால் விரலை வாய்க்குள் விட்டுக் கடித்து ஆழியைக் கழற்றி விட்டார்! யார் கால் விரலை தன் வாய்க்குள் எடுத்து வைத்தார்...? காத்திருங்கள் அடுத்தவாரம்...?


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

உதயம் 1293 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 15, 2021

# கனடாவின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி யாழ் பல்கலைக்கழக நினைவுத்தூபி சம்பவத்தை கண்டிக்கின்றார்

கனடாவின் ஒரேயொரு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி யாழ் பல்கலைக்கழக நினைவுத்தூபி இடிக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்துள்ளார். மேற்படி விடயம் தொடர்பாக அவர் அதிர்ச்சியடைந்த நிலையில் கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு கூறுகின்றார்

"பல்கலைக் கழகங்களும் உயர் பாடசாலைகளும் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்து மாணவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதை தங்கள் கொள்கைகளாக பேணவேண்டிய இடங்கள் ஆகும். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவ்வாறான ஒரு இடமாகத் தெரியவில்லை. இந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தகர்க்கபபட்ட சம்பவம் அதைத் தான் எமக்கு காட்கின்றது"



"Tearing down the memorial built to commemorate Tamils killed in the Mullivaikkal Genocide and to heal the wounds of the victims, their families, and the community is a despicable act by the Sri Lankan government.

The cycle of erasure and annihilation of Tamil identities, experiences, and history on the island has continued for years. Nearly 12 years after Mullivaikkal, the Sri Lankan government continues to actively erase and suppress the victims of the genocide. To end this cycle, accountability and justice must prevail.

Universities and School campuses, especially, have always been places where free speech and academic freedoms prevail, and the destruction of the memorial is a deliberate attack on the freedom of speech at the University of Jaffna.

I strongly condemn the destruction of the Mullivaikkal Memorial at the University of Jaffna and I call upon the Sri Lankan authorities to reinstate the memorial and allow students, faculty, and staff the freedom to mourn."

